பக்கங்கள்-16 | 13.கார்த்திகை.2022 | விலை–50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182


# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்


T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713564443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –389



## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வுகள் ராஜபக்ஷக்களின் குடும்ப அரசியலுக்கு அடிக்கும் சாவுமணியே!




## நவம்பர் 27 மாவீரர் நாள் சிறப்பு பார்வை



## ஈழத்தமிழர் ஓர் இனக்குழுமமெனில், இடம்பெற்றது இனப்படுகொலையே!

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வுகள் ராஜபக்ஷக்களின் குடும்ப அரசியலுக்கு அடிக்கும் சாவுமணியே!



மக்கள் பேரெழுச்சியின் பின்னால் ரணில் மட்டுமல்ல நாமல் ராஜபக்சவும் இருந்துள்ளது இப்போது அம்பலமாகியுள்ளது. இப்பேரெழுச்சியின் காரணமாக மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று பிரகடனம் செய்யும் ரணில், இன்னொரு மாற்றத்துக்கு இடமளிக்கத் தயாரில்லை. எதிரணிகளை பலவீனப்படுத்துவதன் மூலம் தமது அணியைப் பலமாக்கும் இவரது சூத்திரம், நிலைமாறு அரசியலில் பல தலைகளை தடுமாற வைக்கிறது.

இலங்கையின் 1970ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் மார்க்ஸிஸ கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சியமைத்து, புதிய அரசியலமைப்பை உருவாக்கி நாட்டை குடியரசாக மாற்றியது.

151 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 17ஐ மட்டும் இத்தேர்தலில் பெற்ற ஐக்கிய தேசிய கட்சி, 1977 பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையில் வெற்றிபெற்று, அதன் தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை முதலில் பிரதமராக்கி, அடுத்தாண்டில் அரசியலமைப்பு திருத்தத்தினூடாக முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக்கியது.

1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியை படுதோல்வியடையச் செய்வதற்கு, முக்கிய காரணியாக அமைந்தது ஒரு புத்தகம். மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட இந்தப் புத்தகத்தின் பெயர் 'குடும்ப மரம்' (Family Tree)

அவ்வேளை அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த கலாநிதி விக்கிரமவீரசூரிய என்பவரே இந்தப் புத்தகத்தை உருவாக்கியவர். ஜே.ஆரின் அமைச்சரவையில் முக்கியமானவராக இருந்த காமினி திசநாயக்கவின் மைத்துனர் இவர்.

1970-1977 சிறிமாவோவின் ஆட்சிக்காலப்பகுதியில் பல அரசியல் பதவிகளை வகித்த சுமார் 140க்கும் அதிகமான அவரின் உறவினர்களின் படங்கள், உறவு முறை, வகித்த பதவிகள், சுயவிபரங்களை உள்ளடக்கியதாக அரசியல் தேவையை ஒட்டி இப்புத்தகம் தயாரிக்கப்பட்டது. இதன் முகப்பு அட்டையில் சிறிமாவோவை ஒரு மரமாகச் சித்தரித்து அதன் ஒவ்வொரு இலைகளிலும் அரசியல் பதவிகளை வகித்த உறவினர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு தேர்தல் காலத்தில் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சிக்காலத்தில் இவ்வாறான புத்தகமொன்றை ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருப்பாரானால், முகப்பு அட்டையில் இருநூறுக்கும் அதிகமான ராஜபக்ச குடும்பத்தினரின் படங்கள் இடம்பெற்றிருக்கும். ஜே.ஆரின் வாரிசாக இருந்தும் ரணிலுக்கு ஏனோ இந்தச் சிந்தனை தேர்தல் காலங்களில் வரவில்லை.

காலம் பிந்தினாலும் இப்போது அதிர்ஸ்டமாகக் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை இறுகப் பற்றியவாறு ராஜபக்ச குடும்பத்தை அடியோடு அரசியலிலிருந்து அகற்றும் வேலையை அட்டகாசமாகவோ ஆர்ப்பாட்டமாகவோ இல்லாமல் அவர் ஆரம்பித்துள்ளதை காணமுடிகிறது.

காலிமுகத்திடலை மையப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட மக்கள் புரட்சி மகிந்தவை பிரதமர் பதவி துறந்து திருமலைக்கு ஓடச் செய்தது. பசில் ராஜபக்சவை சகல பதவிகளையும் இழந்து வீட்டில் வைத்தது. மகிந்தவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ச, மூத்த சகோதரர் சமல் ராஜபக்ச, அவரது புதல்வர் சசீந்திர ராஜபக்ச ஆகியோரையும் அமைச்சர் பதவிகளை இழக்க வைத்தது. இறுதியில் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதிக் கதிரையிலிருந்து இறக்கியதோடு நாடோடியாகவும் திரியச் செய்தது.

ரணில் ஜனாதிபதியாகி ஆறு மாதங்களுக்கிடையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசியலில் பாரிய பின்னடைவை சந்தித்து வருகின்றன. ரணிலை ஆதரிக்கும் மகிந்தவின் பொதுஜன பெரமுன மூன்றாகப் பிளவுபட்டுள்ளது. சஜித் பிரேமதாச அணியினர் உதிரிகளாகக் கழன்று ரணிலுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

மகிந்த ராஜபக்ச அரசியலிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக ஒரு செய்தி ஊடகங்களில் முதன்மையாக இடம்பெறுகிறது. ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக தம்மை நியமிக்கவில்லையென நாமல் ராஜபக்ச பொதுமக்களுக்கு அறிவிக்கிறார்.



பொதுஜன பெரமுனவின் ஒரு பகுதியினர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பொதுத் தேர்தலை சந்திக்க விரும்புவதாக இன்னொரு செய்தி. படிக்கும் போது இவை வெறுமனே செய்திகளாகக் காணப்பட்டாலும், அடிப்படையில் இவை ஒரு விடயத்தைத் தெரிவிக்கின்றன. மகிந்த ராஜபக்சவின் அரசியல் அஸ்தமனம் அவர் கண்முன்னால் தெரிய வந்துள்ளது.

தமது புதல்வர் நாமல் ஜனாதிபதியாகும் வயது (பக்குவம் அல்ல) வரும் வரை தமது குடும்பத்தின் ஆளுகையில் ஜனாதிபதிப் பதவியை வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவே, அரசியலில் பூஜ்ய அனுபவம் கொண்ட கோட்டாபயவை ஜனாதிபதியாக்கினார் மகிந்த. ஆனால் அதுவே வினையாகி முழுக்குடும்பத்தையும் அரசியலில் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மகிந்த மூன்றாவது முறையும் ஜனாதிபதியாக விரும்பியது தான் இன்றைய பாதகநிலைக்கு முக்கிய காரணமென்று பகிரங்கமாகக் கூறியுள்ளார் குடும்பத்தின் மூத்தவரான சாமல் ராஜபக்ச. அதுமட்டுமன்றி, பசில் ராஜபக்சவை மீண்டும் அரசியலுக்குள் இழுக்க வேண்டாமென்று அவரது அடியவர்களுக்கு எச்சரிக்கை கலந்த ஆலோசனையும் வழங்கியுள்ளார் சாமல்.

கோட்டாபயவுக்கெதிராக உருவாகி அவரை பதவியிழக்கச் செய்த பேரெழுச்சியில் நாமல் ராஜபக்சவுக்கும் பங்குண்டு என்பதை ஊடகங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளன. கோட்டாபய ஜனாதிபதியாகத் தொடருவாரானால் அதனால் தங்கள் குடும்பத்துக்கு ஏற்படும் பாதிப்பு தமது ஜனாதிபதி ஆசையை நிர்மூலமாக்கும் என்ற அச்சத்தில் தமது ஆதரவாளர்களை காலிமுகத்திடல் போராட்டத்தில் நாமல் ராஜபக்ச இணைத்ததாக பொதுஜன பெரமுனவின் உள்வீட்டிலிருந்தே உண்மை வெளிவந்துள்ளது.

மொத்தத்தில் பார்க்கப் போனால், ராஜபக்ச சகோதரர்களும் அவர்களின் குடும்ப உறவுகளும் இனிமேல் மனமொத்த எந்த அரசியல் வேலைகளையும் முன்னெடுக்க முடியாத நிலைமை மேலோங்கி வருகிறது. நாமலின் எதிர்காலத்தைச் சாதகமாக்கவென மகிந்த முன்னெடுத்துவரும் மீண்டும் எழுவோம், பேரணியும் பிசுபிசுத்துள்ளது. களுத்துறையிலும் கண்டியிலும் புத்தளத்திலும் இந்த எழுச்சிக் கூட்டங்களை ஏற்பாடு செய்தவர்கள் ஊழல் பேர்வழிகள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள். இதன் காரணமாகவே இதன் ஏற்பாட்டாளர்களான ரோகண அபயகுணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, சனத் நிஷாந்த ஆகியோரை அமைச்சர்களாக நியமிக்க முடியாதென ரணில் தொடர்ந்து மறுத்து வருகிறார். இவர்களோடு நாமலுக்கும் அமைச்சரவை கதவை திறப்பதற்கு மகிந்த இணக்கமில்லை.

ரணிலின் பொதுவான அரசியல் பண்பு பற்றி எல்லோரும் கூறிக்கொள்வது ஒன்றுதான். தமது தலைமையிலான அணியை அல்லது தமது கட்சியை பலப்படுத்துவதில் நேரடியாக ஈடுபடுவதைவிட, எதிர்தரப்பினரை பலவீனப்படுத்துவதன் வழியாகவே தமது தரப்பை இலகுவாக பலமாக்கிக் கொள்பவர் இவர். இது ஒருவகை அரசியல் சூத்திரம்.

1970ல் மூன்றிலிரண்டு பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றிய சிறிமாவோ அணியிலிருந்த மார்க்ஸிஸவாதிகளான 25 எம்.பிக்களை (சமசமாஜ கட்சி - 16, கம்யூனிஸ்ட் கட்சி - 9) சுதந்திரக்கட்சியின் ஒரு தரப்பினரை தம் வசமாக்கி அதனூடாக அவர்களை வெளியேற்றி, 1977 தேர்தலில் சிறிமாவோ அணியை தலைகுப்புற வீழ்த்தியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்பதை இப்போது பலரும் மறந்திருக்கலாம்.

இந்த மாதம் 3ம் திகதி கொழும்பில் பாரிய போராட்டமொன்று அரசுக்கு எதிராக இடம்பெற்றது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, 'மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இனியும் ஏன் போராட்டம்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். இதன் மூலம் அவர் எதனைச் சொல்ல வருகிறார்?

'மக்கள் பேரெழுச்சி ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பவே இடம்பெற்றது. அது நிறைவேறி விட்டது" என்பதை நேரடியாகவே சொல்கிறார். போராட்டம் இடம்பெற்றபோது அவர்களுடன் நெருக்கமாக இருந்தவர் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தவர் ரணில். விரும்பிய மாற்றம் போராட்டத்தினூடாக நிறைவேறி விட்டது என்பதையே தமது கேள்வியின் வாயிலாக அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் நிரந்தரமானதாக, தமது தலைமையிலான அணியை தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

இலங்கையின் அரசியல் எதிர்காலமென்பது வேறெந்தத் தரப்புக்கும் மாறக்கூடாது என்பதே அவரது விருப்பு. அதற்காக நிலைமாறு அரசியலில் தலைகளைத் தடுமாற வைப்பது அவரது இலக்கு.

**-கழியோடி-**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

# 194 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

## இன்றைய அரசின் நழுவிப் போகும் அரசியல்


இலங்கையின் இன்றைய அரசு தொடர்பில் உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் கடும் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. இதற்குக் காரணம் மொட்டுக் கட்சியும், சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தமக்கு ஏற்றாற்போல ஒருவரை ஜனாதிபதியாக பரிந்துரை செய்து பாராளுமன்றிலும் பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சிக்கு கொண்டுவந்தமையேயாகும். இதனால் இவர்களுக்குள் பிளவும் ஏற்பட்டுள்ளது. இவர்களால் பதவிக்குக் கொண்டுவரப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எவ்வாறு நாட்டு மக்களுக்கு உண்மையாக செயற்பட முடியும் என்கிற கேள்வி எழுந்துள்ளது. ஏற்கனவே மக்களின் கடும் எதிர்ப்பினைச் சந்தித்துள்ள மேற்கூறிய தரப்பினரைக் காப்பாற்றவே ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. முப்படைகளின் துணைகொண்டு மக்களை அடக்கியாள நினைத்து செயற்பட்ட தற்போதைய ஜனாதிபதி தொடர்பில் மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். அவர் தனது அணி சார்ந்தவர்களிடத்தில் ஒரு முகத்தினையும், பாராளுமன்றிலும் நாட்டு மக்கள் மத்தியில் பிறிதொரு முகத்தினையும் காட்டி நழுவிப் போகும் அரசியலை தொடர்ந்து செய்து வருகின்றார்.

பதவியிலிருந்து விலகவும் முடியாமல், தனது கட்சியினைப் பலப்படுத்தவும் முடியாமல், தனக்குரிய கடமையினை சரிவரச் செய்ய பலரது கருத்தினையும் செவிமடுக்கத் தலைப்பட்டுள்ளார். அவரைக் கொணர்ந்தவர்களுக்கு விசுவாசமாக நடந்துகொள்ளவேண்டிய தேவை அவருக்கு இருக்கிறது. இல்லையெனில் எந்த நேரத்திலும் அவரது பெரும்பான்மைப் பலம் பாராளுமன்றில் தகர்த்தெறியப்படலாம் என்கிற அச்சம் அவரைச் சூழ்ந்துள்ளதால். அனைவரிடத்திலுமிருந்து தப்பித்துக்கொள்ள அவரவருக்கு ஏற்றாற்போல செயற்படவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் மக்களுக்குத் தேவையான விடயங்களைச் செய்ய ஜனாதிபதியால் முடியவில்லை மாறாக மேலும் மக்கள் மீது சுமை ஏற்றப்பட்டுள்ளது. நாட்டின் ஆட்சியானது ஸ்திரமானதாக இருக்கவேண்டும். அப்போதுதான் தங்குதடையின்றி மக்களுக்கான பணியை ஜனாதிபதியால் மேற்கொள்ள இயலும். இன்று இலங்கையின் ஆட்சி அப்படியானதல்ல, நிலையற்றது. நழுவல் போக்குடையது.


எல்லாத்துறைகளுக்குள்ளும் புதிய திட்டங்களைக் கொணர்ந்து ஆட்சியை இழுத்தடித்துவிட்டு. ஜனாதிபதித் தேர்தல் என்கிற ஒன்று வருகின்ற போது மீண்டும் ராஜபக்சக்கள் பதவிக்குவர தற்காலிகமாக நியமிக்கப்பட்டவரே இந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள். இன்றும் அவர்கள் கூட்டாகவே இருக்கிறார்கள். பிரதமராக மொட்டுக் கட்சி உறுப்பினர் பதவி வகிக்கையிலும் ராஜபக்சக்களின் நிழலே அவர்களின் பின்னால் தொடர்கின்றது. அவர்களாலேயே இன்றைய ஆட்சி நகர்த்திச் செல்லப்படுகின்றது. இன்றும் தீர்மானிக்கும் சக்தியாக ராஜபக்சக்களே இருக்கின்றனர்.

ஊழல்வாதிகளாக, மனித உரிமையை மீறிச் செயற்பட்டவர்களாக, இந்த நாட்டை அழித்தவர்களாக தென்னிலங்கை மக்களாலேயே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இன்று பொதுவெளியில் நடமாட முடிகிறதெனில் அதற்குக் காரணம் யார்?. கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகள் தான் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் எனக்கூறும் இன்றைய ஜனாதிபதி, அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காதது ஏன்?. தெற்கின் பெரும்பான்மையான சிங்கள மக்களால் தூக்கிவீசப்பட்ட ராஜபக்ச தரப்பினர் தொடர்பில் இன்றும் ஜனாதிபதி மௌனம் சாதிப்பது ஏன்?. தமிழ் மக்களின் தீர்வு விடயங்கள் தொடர்பிலும் அவரது நழுவல் போக்கு தென்பட்டுள்ளது. இதன் பின்னணியிலும் ராஜபக்சக்கள் உள்ளனர் என்பது உண்மை.

மக்களது ஆணையில்லாமல் தனக்கு ஏற்றாற்போல ஆட்சியை அமைத்துக்கொண்டு மக்கள் முன் ஒன்றையும், தனது அணிக்குள் ஒன்றையும் செய்துவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால், நாட்டு மக்களுக்குத் தேவையான ஆக்கபூர்வமான விடயங்களைச் செய்ய முடியாது. நழுவிப் போகும் அரசியலைத் தான் செய்ய முடியும். தனியாக சுயமாக சிந்தித்துச் செயற்படும் அதிகாரம் அவருக்கு இல்லை என்பதே இன்றைய யதார்த்தம்.




படம் 2. கெரில்லா எதிர்ப்பு வான்வழிப் படைகளின் "வரிசை" நகர்வு




படம் 3. கெரில்லா எதிர்ப்பு வான்வழிப் படைகளின் "நக" நகர்வு

பலப்படுத்தப்பட்ட சண்டை அணிகளால் தொந்தரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அணிகளின் ஆளணி எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு மாறுபடலாம்.

தடைப்படுத்தல் நடவடிக்கைகள் உள்ளக மற்றும் வெளிப்புற விநியோக மூலங்களிலிருந்து கெரில்லாப் படைகளைத் தனிமைப்படுத்தலே தடைப்படுத்தல் நடவடிக்கையின் (சில வேளைகளில் அமெரிக்கர்கள் இந்த நடவடிக்கை எனவும் அழைக்கின்றனர்.) நோக்கமாகும்.

### கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளின் வகைகள்

இவ்வாறான நடவடிக்கைகள் அவசியம் முன்னேறித் தாக்கும் பண்பைக் கொண்டதாகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதாகவும் இருக்க வேண்டும். அத்துடன், கெரில்லாக்கள் தமது படைகளையும், படைக்கலன்களையும் நகர்த்தும் சாத்தியத்தைக் கொடுக்காவண்ணம் ஒரே நேரத்தில் பல்வேறு திசைகளிலிருந்து மேற்கொள்ளப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.

கெரில்லாக்களை அழிக்கும் நோக்கில் அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற சமர் நடவடிக்கைகளில் மிகச் சிறந்த முறையாகச் சகல குழுக்களினதும் தொடர்ச்சியான முற்றுகையுடன் இரு பக்கங்களாலும் கெரில்லாக்களைச் சுற்றி வளைத்தல் கருதப்படுகின்றது. முற்றுகையை மேற்கொண்டபின், கெரில்லாக்களுக்கு எதிரான சமர் நடவடிக்கைகளுக்காகப் பின்வரும் வழிவகையில் ஒன்றை மேற் கொள்ளப்பரிந்துரைக்கப்படுகின்றது.

முற்றுகை வட்டத்தைச் சகல பக்கங்களாலும் கிழித்தல். அவர்கள் இருக்கின்ற பிரதேசத்தில் தொடர்ச்சியாகக் கெரில்லாக்களைப் பகுதி பகுதியாக அழித்து, அவர்களைச் சிதறடிக்கச் செய்தல்.

முற்றுகை வளையத்தின் ஒரு பகுதியில் மறித்தடிக்கின்ற சமர் நடவடிக்கைகளை மேற்கொண்டபடி, பிறிதொரு பக்கத்தில் முன்னேறித் தாக்குதலைத் தொடுத்தல்.

இதன் போது, ஒரு வகை மற்றையதைப் பெரியளவில் தடுக்கும் வகையிலான பிரதான நான்கு வகை நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

கெரில்லாக்களையும் அவர்களது விநியோக முகாம்களையும் தொடர்புகளையும் கட்டுமானங்களையும் கண்டுகொள்கின்ற, அழிக்கின்ற நோக்கில் "சொல், அழி" நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறித்த, மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசத்திலிருந்து கெரில்லாக்களை வெளியேற்றும் நோக்கிலும் அவர்களைக் கெரில்லா எதிர்ப்புப் படைகள் கட்டுபாட்டில் (இதற்குச் சாத்தியம் இருக்குமானால்) வைத்திருக்கும் நோக்கிலும் "துப்பரவாக்கல்.கட்டிப்போடல்" நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் பிரதேச மக்களின் பூரண ஆதரவை எங்கே கெரில்லா எதிர்ப்புப் படைகள் பயன்படுத்துகின்றதோ அங்கு மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன.

கேரில்லாக்களின் தாக்குதல் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலையில் இருக்கின்ற நிர்வாக மையங்களுக்கும் கூட்டுப்படையாட்களைச் சேர்ந்த பிரதேசக் கெரில்லா எதிர்ப்புப் படைகளுக்கும் உதவி வழங்குவதற்காகச் "சிறப்புச் செயற்பாட்டு" நடவடிக்கைகள் மேற்கொள்ளத்திட்டமிடப்படுகின்றன.

மாநிலங்களதும் பிரதேசங்களதும் நிர்வாக மையங்கள், முக்கிய அரசாங்க நிறுவனங்கள், இராணுவ - கட்டுமான நிலைகள் போன்றவற்றின் பாதுகாப்பிற்கும் காலுக்குமான நடவடிக்கைகள். இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மிகவும் பொருத்தமான நகர்வு முறைகள் பின்வருவனவாகும்.


படைகளும் படைக்கலன்களும் போதாமல் இருக்கின்ற நிலைமைகளில் வழக்கமாக 'வரிசை' நகர்வு பயன்படுத்தப்படுகின்றதுடன். இந்நகர்வு நீர்த்தடைகள் நெடுகிலுமாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்நகர்வின் சாராம்சம் யாதெனில், ஆற்றின் இரு பக்கங்களிலும் படைகள் தரையிறக்கப்பட்டு. கரைகளின் நெடுகிலுமாக முன்னேறிச் செல்லுதலாகும்.(படம்-2)

"நக" நகர்வு, இதுவும் நீர்த்தடைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. நடவடிக்கைகளில் பங்கெடுக்கின்ற படைகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. இவ்விரண்டு பிரிவும் ஒரேநேரத்தில் ஆற்றங்கரையிலிருந்து 200-250 மீற்றர் தொலைவில் தரையிறக்கப்படுகின்றன. களமுனையை நோக்கித்திரும்பிய இவ்விரண்டு பிரிவினரும் ஏகோபித்த சைகை கிடைத்ததும் கெரில்லாக்களை நீர்த்தடைக்குத் தள்ளிச்சென்று, அழிக்கும் நோக்கில் அத்தடையை நோக்கி முன்னேறத் தொடங்குகின்றனர்.

இதன் போது, கெரில்லாக்கள் பக்கவாட்டாகப் பின்வாங்கிச் செல்லாமல் இருப்பதற்காக. அப்பகுதிகளில் முன்னரேயே பதுங்கித் தாக்குதல் நடவடிக்கைகள் (தடைப்படுத்தல் நிலைகள்) ஒழுங்குப்படுத்தப்படுகின்றன.(படம் 3)

### கெரில்லா எதிர்ப்பு வான்வழிப் படைகளின் "வளைய" நகர்வு

கெரில்லாக்கள் தங்கியிருக்கின்ற பிரதேசம் துல்லியமாக அறியப்பட்ட வேளைகளில் வழக்கமாக "வளைய" நகர்வு மேற்கொள்ளப்படுகின்றது. இந்நகர்வின் சாராம்சம் யாதெனில், கெரில்லாக்கள் தங்கியிருக்கின்ற இடத்திற்குச் செல்கின்ற பாதைகளின் சுற்றுவட்டத்தில் சில குழுக்கள் ஒரேநேரத்தில் தரையிறக்கப்படுவதுடன், கெரில்லாக்களை முற்றுகையிடுகின்றதும் அவர்களைச் சிறு பரப்பில் ('கொலை வலயத்தில்') குவிய நிர்ப்பந்திக்கின்றதுமான நோக்கில் அப்பிரதேசத்தை ஒரே நேரத்தில் தாக்குவதுமாகும். முற்றுகை பூர்த்தியாகின்ற தருணத்தில், அவ்வலயத்திற்குப் பெருமளவிலான கூட்டுத் தாக்குதலைத் தொடுக்கவும் முற்றுகையிடப்படு இருக்கின்றவர்களைப் பூரணமாக அழிக்கும் நோக்கிலான சமரை மேற்கொள்ளவும் திட்டமிடப்படுகின்றது.(படம்-4)




படம் 4. கெரில்லா எதிர்ப்பு வான்வழிப் படைகளின் "வளைய" நகர்வு

தொடர்வான்....

# நவம்பர் 27 மாவீரர் நாள் சிறப்பு பார்வை



ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நவம்பர் மாதம் மாவீரர் தினத்தை மக்கள் அனுஷ்டிப்பதற்கு தடை இல்லையென உத்தியோகபூர்வமாக இன்னமும் அறிவிக்க வில்லை. இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் கடந்த நல்லாட்சி காலத்தில் அனைத்து நிகழ்வுகளும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடதக்கது. அந்த வகையில் பார்க்கின்ற பொழுது மாவீரர் நாள் என்பது பற்றி பார்ப்பது பொருத்தமான விடயமாக இருக்கும்.

இறுதி யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. இன்னமும் இனப்படுகொலைக்குள்ளாக்கப்பட்ட தமது உறவுகள் பற்றிய பதிவுகளை எம்மினம் பூரணப்படுத்தவில்லை. இறுதி நாட்களில் நடைபெற்ற வீரச்சாவு விபரங்கள் கூட முழுமைப்படுத்தப் படவில்லை. இந்த விடயங்களில் யாராவது அக்கறை காட்ட முனைந்தால் தலையில் குட்டி அமர வைக்கும் போக்கினையே சிலர் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். வரலாற்றை மாற்றி எழுதும் பிரகிருதிகள் தமது கற்பனைகளை ஓரிரு சம்பவங்களில் சோடித்து இணையத்தளங்கள், முகநூல்களில் உலாவ விடுகின்றனர். லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்ற இயற்பெயரைக்கொண்ட மாவீரருக்கு சீலன் எனப் பெயர் வைத்தவன் தானே என்றும் தான் ஒரு மூத்த உறுப்பினர் என்றும் அண்மையில் ஒருவர் இணையத்தில் பதிவிட்டிருந்தார்.மூத்த உறுப்பினர் என்று சொல்வதற்கு அவர் தலை நரைக்கும் வரை காத்திருந்தார் போலும். வரலாற்றில் நடைபெறும் திணிப்புக்கள் என்ற விடயத்தில் நாம் எச்சரிக்கையாகத் தான் இருக்க வேண்டும்.

அந்த விடயத்தில் மாவீரர் துயிலுமில்லங்கள் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். ஏனெனில் இன்றைய நிலையில் மாவீரர் துயிலுமில்லங்களின் செயற்பாடுகள், முடிவுகள் தொடர்பாக தீர்மானிக்கும் உரிமை தமக்கே உள்ளது என்ற நினைப்பு சிலரிடம் ஊறி விட்டது போல் உள்ளது. விடுதலைப்புலிகளின் முதல் மாவீரர் சங்கரின் வித்துடல் தமிழகத்தில் எரியூட்டப்பட்டது. (கொள்ளி வைத்தவர் அப்பையா அண்ணர்) இரண்டாவது, மூன்றாவது மாவீரர்களான லெப்.சீலன் மற்றும் ஆனந்தின் உடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. எப்படியோ தகவல் அறிந்த சீலனின் தாயார் தனது மகனின் உடலை தன்னிடமே கையளிக்க வேண்டுமென பொலிஸாரிடம் வேண்டிக் கொண்டார். அவ் வேண்டுகோளை பொலிஸார் நிராகரித்தனர். ஊர்காவற்துறைப் பகுதியிலேயே பொலிஸாரால் இவ்விரு உடல்களும் எரியூட்டப்பட்டன. வரலாற்றுச் சமரான 1983 ஜூலை திருநெல்வேலியில் வீரச் சாவெய்திய லெப். செல்லக்கிளி அம்மானின் வித்துடலைப் புலிகளே கொண்டு சென்றனர். நீர்வேலிப் பகுதியில் இவ் வித்துடல் விதைக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் இவ் விடயம் பகிரங்கப்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை. சுவரொட்டிகள் மூலமே இவ்விடயம் வெளிப்படுத்தப்பட்டது. முதல் மாவீரரான சங்கரின் ஓராண்டு நினைவு நாளையொட்டியே அவரது வீரச்சாவுச் சம்பவமும் வெளிப்படுத்தப்பட்டது .

**முதல் மாவீரர் சங்கர்**

அன்றைய காலகட்டத்தில் இருவரின் பாதுகாப்புக் கருதி சங்கரின் வீரச்சாவை உடனடியாக வெளிப்படுத்த முடியவில்லை. பல்கலைக் கழக விரிவுரையாளரான நித்தியானந்தனையும், அவரது துணைவியார் நிர்மலாவையும் கைது செய்ய இராணுவத்தினர் யாழ். நாவலர் வீதியிலுள்ள அவர்களது வீட்டுக்குச் சென்றனர். 27.10 1982 அன்று இடம்பெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் காயமடைந்த சீலன், புலேந்திரன், ரகு (குண்டப்பா) ஆகியோர் இவர்களது வீட்டிலேயே தங்க வைத்து சிகிச்சையளிக்கப்பட்டனர்" என்ற தகவல் படையினருக்குக் கிடைத்திருந்தது. படையினர் இவர்களது வீட்டை முற்றுகையிடச் சென்ற போது அங்கிருந்த சங்கர் அந்த முற்றுகையிலிருந்து தப்ப முயன்றார். படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வயிற்றில் காயமடைந்த அவர் கைலாச பிள்ளையார் கோவிலடிக்கு ஓடி வந்து சேர்ந்த போது துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்தார் அப்போது யாழ்.பல்கலைக்கழக மாணவனும் பின்னாளில் 18 ஆண்டுகளுக்கு மேலாக ஈழநாதம் நாளிதழின் பிரதம ஆசிரியராக விளங்கிய வருமான பொ .ஜெயராஜ். அவர் சங்கரைக்கண்டார். ஏற்கனவே அறிமுகமாயிருந்த சங்கரை தனது துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்றார். யாழ்.பல்கலைக்கழகத்துக்கு எதிரே உள்ள குமாரசாமி வீதியிலுள்ள 41 எண்ணுடைய வீட்டுக்குக் கொண்டுபோனார். இந்தப் போராட்டத்துடன் சம்பந்தமுடைய பல்கலைக் கழக மாணவர்கள் பலர் பழகி வந்த இந்த வீட்டில் இருந்த ஏனையோருடன் இணைந்து சங்கரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அன்றைய காலகட்டத்தில் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவது முடியாத விடயம். எனவே மேலதிக சிகிச்சைக்காக சங்கர் தமிழகத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். சிவகுமார் என்னும் இயற்பெயரைக் கொண்ட அன்ரனே இவரைத் தமிழகத்துக்குக் கொண்டு சென்றார்.

**சங்கருக்காக உண்ணாவிரதமிருந்த தலைவர்**

பொதுவாக எவருமே நினைவு தப்பி வலியில் துடிக்கும் போது "அம்மா ..... அம்மா.... என்றே அரற்றுவதுண்டு. ஆனால் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட அந்தச் சமயத்தில் சங்கர் " தம்பி ... தம்பி " என்றே அரற்றினார். தலைவர் சங்கரின் மனதில் எந்தளவுக்கு ஆழமாக உறைந்திருந்தார் என்பதற்கு இதுவோர் சிறந்த உதாரணம். தமிழர்களின் விடுதலைக்காக இதுவரை 36 ஆயுதப்போராட்ட இயக்கங்கள் தோன்றிய போதும் அதில் புலிகள் மட்டுமே வித்தியாசமாகத் தெரிந்தார்கள் என்றால் அதற்கு இது போன்ற உதாரணங்களை சுட்டிக் காட்டலாம். வேறு எங்கும் காண முடியாத விடயம் இது . அந்தப் பாசப்பிணைப்பே வரலாற்றில் முதல் மாவீரனாக (விடுதலைப் புலிகள் இயக்கத்தின்) பெயர் பதித்த சங்கரின் நினைவு நாளின் போது 1983 இருந்து 2008 வரை நீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருக்கும் எண்ணத்தைக் தலைவருக்கு ஏற்படுத்தியது.

**மாவீரர் நாள் அறிவிப்பு**

இதன் அடுத்தகட்டம் தான் மாவீரர் நாள் பற்றிய அறிவிப்பு. இந்திய இராணுவம் செயற்பட்ட காலத்தில் 1989 ம் ஆண்டில் இந்த அறிவிப்பு மணலாற்றுக் காட்டில் இருந்த ('14'முகாம்) மூலம் சகல பிராந்திய தளபதிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. முதலாம் உலகப்போரின் போது போர்க்களத்தில்உயிர்நீத்தவீரர்களைநினைவு கூரும் வகையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பொப்பி மலர் நினைவு நாள் பற்றி சங்கர் என்ற மூத்தபோராளி உரையாடலொன்றின் போது தலைவரிடம் குறிப்பிட்டார் (இவரே பின்னாளில் விமானப் படையின் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகித்ததுடன் அதனை வழி நடத்தியவர். (இயற்பெயர் வை.சொர்ணலிங்கம்) இந்த பொப்பி மலர் உதாரணமே இலங்கையில் 'சூரியமல்' எனப்படும் சூரியகாந்தி இயக்கத்துக்கு வழி வகுத்தது.

அந்தப்பொறியை சங்கர் தட்டியபோதே எங்களது தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆகுதியாகிய போராளிகளுக்கும் ஒரு நாளைப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற சிந்தனை தலைவர் மனதில் உருவானது. அந்த வகையிலேயே புலிகளின் முதல் மாவீரரான சங்கரின் (சத்தியநாதன்) நினைவு நாளை மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தினார் அவர். இது பற்றி குறிப்பினை தேவர் அண்ணாவும் வெளியிட்டிருந்தார் .

**கிழக்கில்...!**

மட்டக்களப்புக்கு இந்த அறிவிப்பு வந்த போது வடக்கு,கிழக்கில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவம் கட்டம்கட்டமாக வெளியேறும் நிலையில் இருந்தது .முதலாவது தொகுதியினர் அம்பாறை மாவட்டத்தை விட்டு 30.10.1989 அன்று முற்றாக வெளியேறிவிட்டனர் ஈ.பிஆர்.எல்.எப் ,ஈ.என்.டி.எல். எப்.டெலோ இயக்கங்களுக்கு கூடுதலான ஆயுதங்களையும் அவர்களால் பிடிக்கப்பட்ட இளைஞர்களுக்கு பயிற்சியும் வழங்கி விட்டே இம் மாவட்டத்திலிருந்து வெளியேறினர்.இந்தியப்படையினர். இவர்களால் பயிற்சியளிக்கப்பட்டோர் திருக்கோவில் மற்றும் தம்பிலுவில் ஆகிய இடங்களில் இரு பெரும் முகாம்களை அமைத்திருந்தனர். இந்த நிலையில் அன்றைய அம்பாறை மாவட்டத் தளபதியாக விளங்கிய அன்ரனி தலைமையில் ஒரு முகாமையும் இன்னொன்றை அன்றைய மட்டக்களப்பு மாவட்ட தளபதியாக விளங்கிய ரீகன் தலைமையிலும் 05.11.1989 அன்று தாக்கி கைப்பற்றினர் புலிகள். இந்த நிலையில் அம்பாறையில் அன்ரனி முதல் மாவீரர் நாளை திறம்பட நடத்தினார். திருக்கோயில் பகுதியில் தளபதி அன்ரனி தலைமையில் போராளிகள் பாதுகாப்பு வழங்க அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் நிகழ்வை நடத்தினர். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்ததால் பெரும்பாலான கிராமங்களில் மாவீரர்களின் படங்கள் வைத்து தீபம் ஏற்றப்பட்டது.வந்தாறு மூலையில் புலிகளும் மக்களும் கூடியிருந்த இடத்துக்கு எதிர்பாராத விதமாக இந்தியப்படையினர் வந்த போதும் அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை. திருகோணமலையைப் பொறுத்தவரை இந்திய இராணுவத்தின் நெருக்கடி அதிகமாக இருந்தது. அவ்வாறிருந்தும் சாம்பல்தீவு மகாவித்தியாலயத்தில் நிகழ்வுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 150 க்கு மேற்பட்ட பொதுமக்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வுக்கான ஏற்பாடுகளின் பாதுகாப்புக்காக ஒரு அணி அனுப்பப்பட்டிருந்தது. இந்த அணிக்கு மேஜர் தர நிலையிலான சுரேஷ் என்ற போராளியையும் (பின்னர் படகு விபத்தில் ஆகுதியானார் ) நிகழ்வைப் பொறுப்பேற்று நடந்த அரசியல் பொறுப்பை ஏற்றிருந்த ரூபனையும் அனுப்பியிருந்தார் பதுமன். அன்றைய காலகட்டத்தில் சங்கரின் புகைப்படம் கூட இவர்களின் கைவசம் இருக்கவில்லை. நிகழ்வு நடைபெறும் தகவல் அறிந்து இந்தியப் படையினர் அங்கு விரைந்தனர். அவர்களை எதிர்த்து புலிகள் போரிட்டனர். ஒரு பக்கம் மோதலில் ஈடுபட்டுக் கொண்டே நிகழ்வையும் நடத்திமுடித்தனர். மாவீரர்களின் பெற்றோரின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சுருக்கமாக நிகழ்வு நடந்தன. ரூபன் சுடரேற்றி வைத்தார்.அதே வேளை இந்தியப்படையினரைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட லெப்.ரிச்சாட் (இராமசாமி குணராசா, இறக்கண்டி, திருகோ ணமலை.)என்ற போராளி களப்பலியானார். இன்னு மொரு போராளியும் இந்தச் சமரில் காயமடைந்தார். மாவீரர் நாளின் மாண்பைப் பேணவும் மாவீரரின் பெற்றோரைக்காக்கும் முயற்சியிலும் தன்னை ஆகுதியாக்கிய முதல் மாவீரனாக ரிச்சாட்டின் வரலாறு அமைந்தது.

**வடக்கில்..!**

கிளிநொச்சி மாவட்டத்தின் நிகழ்வு பிரதேசப் பொறுப்பாளராக இருந்த அத்தாரின் ஏற்பாட்டில் நடைபெற்றது. உருத்திரபுரம் சிவன்கோயிலடி, அக்கராயன்,கிளிநொச்சி ஆகிய இடங்களில் இந்திய இராணுவ முகாம்கள் இருந்தபோதும் இவற்றுக்கு நடுவில் இருந்த கோணாவில் அ.த.க பாடசாலையில் நிகழ்வுகள் நடைபெற்றன. வாடகை மோட்டார் வண்டியில் ஒலி பெருக்கி பூட்டி நிகழ்வு பற்றி அறிவிப்புச் செய்யப்பட்டது. சில வேளை இவர்களுக்கு இந்தியப்படையினரால் தொந்தரவு ஏற்படலாம் எனக்கருதி, நகரில் இருந்த சகல ஒலிபெருக்கி மற்றும் வாடகை மோட்டோர் வண்டிகளின் உரிமையாளர்கள் நிகழ்விடத்துக்கு அழைக்கப்பட்டனர்.

"வானம் பூமியானது பூமி வானமானது" என்ற பெருமாள் கணேசனின் பாடலை பின்னாளில் பிரபல எழுச்சிபாடகராக விளங்கிய S .G சாந்தன் பாடினார். அடிமைத்தனத்துக்கு எதிரான சினிமாப் பாடல்களை மாணவர்கள் பாடினர். (சத்தியமே இலட்சியமாய் கொள்ளடா . உள்ளத்திலே உரம் வேண்டுமடா போன்ற) "ஓநாயும் .சேவல்களும்" என்ற நவீன குறியீட்டு நாடகமும் மேடையேற்றப்பட்டது.வன்னியில் முதன்முதல் மேடையேற்றப்பட்ட இக் குறியீட்டு நாடகத்தை நா. யோகேந்திரநாதன் எழுதியிருந்தார். அன்ரன் அன்பழகன் முக்கிய கதாபாத்திரத்தை ஏற்றிருந்தார். மாவீரர் நாளுக்கான சுடரேற்றல் முதலான நிகழ்வுகளுடன் மிகச் சிறப்பான முறையில் அனைத்தும் நடைபெற்றன.மூன்று முகாம்களிலிருந்தும் இந்தியப்படையினர் வந்தால் எதிர்கொள்ளத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் அசம்பாவிதம் ஏதுமின்றி அனைத்தும் நடைபெற்றன.

மன்னார்ப் பிராந்தியத்தின் சகல மாவீரர் விபரங்களையும் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமுதன் (சுரேஷ் ) தலைவரிடம் சமர்ப்பித்திருந்தார். பண்டிவிரிச்சான் , நானாட்டான், கறுக்காய்க் குளம், முழங்காவில் ஆகிய இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. பண்டிவிரிச்சான் பாடசாலையில் பிரதேசப்பொறுப்பாளர் கணேஷின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெற்றது. கவிதை, பேச்சு, நாடகம் என பல்வேறு நிகழ்வுகளின் போட்டிகளும் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நானாட்டான் நெல் களஞ்சியத்தில் பிரதேசப் பொறுப்பாளர் ஞானியின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடந்தன. பின்னாளில் தமிழீழ நிர்வாக சேவையில் பிரமுகராக விளங்கிய சின்னப்பா மாஸ்டர் இந் நிகழ்வை திறம்படச் செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார். கறுக்காய்க் குளத்திலும் நெற்களஞ்சியத்திலேயே நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதேசப் பொறுப்பாளர் பாரதி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். பூநகரி பிரதேசத்துக்கான நிகழ்வு முழங்காவில் மகா வித்தியாயத்தில் நடைபெற்றது. பிரதேசப் பொறுப்பாளர் சாம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். யாழ்.மாவட்டப் பொறுப்பாளராக பொட்டுவே செயற்பட்டார். அவர் தன்னுடன் பணியாற்றிக் கொண்டிருந்த ராஜன் (பின்னாளில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக விளங்கியவர்) சூட் ( தவளை நடவடிக்கையின் போது வீரச்சாவெய்தியவர்) ஜக்சன் (தற்போது புலம்பெயர் நாடொன்றில் வசிப்பவர்) முதலானோரிடம் மாவீரர் நாள் அறிவிப்பு பற்றிக் குறிப்பிட்டார்.

இந்தியப் படையினரின் நடவடிக்கை தீவிரமாயிருந்ததால் சிறு சிறு குழுக்களாக காலத்துக்கேற்ப செயற்பட்டுக் கொண்டிருந்தனர் புலிகள். நீர்வேலி வாதரவத்தை, குப்பிளான், மாதகல் போன்ற இடங்களில் இந்த நகரும் குழுக்கள் பெரும்பாலும் தங்கியிருந்தன.

நெற்றிபொறியன்
13ஆம் பக்கம் பார்க்க...

# ஈழத்தமிழர் ஓர் இனக்குழுமமெனில், இடம்பெற்றது இனப்படுகொலையே!



'மகாவம்ச மனப்போக்கின் தொடர்ச்சியான வெளிப்பாடுகளே 1983லும், அதற்கு முன்னும் பின்னுமாக அடிக்கடி இடம்பெற்ற தமிழினப் படுகொலைகளும், ராஜபக்ச சகோதரர்கள் தலைமையில் 2009 வைகாசி மாதத்தில் உச்ச நிலையை எய்திய தமிழினப் பேரழிவும் கொடுங்கொலைகளுமாகும்" ஒன்ராறியோ உச்ச நீதிமன்ற தமிழினப் படுகொலை வழக்கு விசாரணையில் பேராசிரியர் அமுது யோசப் சந்திரகாந்தன் தெரிவித்த கூற்று.

உள்நாட்டு யுத்த காலத்தில் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய புதிய அறிவிப்பொன்று கடந்த வாரம் வெளியானதையடுத்து, ரணில் விக்கிரமசிங்க அரசின் திட்டம் இதுதானா என்ற கேள்வி எழும்பியுள்ளது.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லையென்றும், இறுதி யுத்தத்தில் சரணடைந்த தமிழர்கள் காணாமல் போகவில்லையென்றும் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். சரணடைந்தவர்கள், காணாமல் போனவர்கள் என்ற சொற்பதங்களையும் அவர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆரம்பத்திலேயே ஒரு மயக்கம் ஏற்படுகிறது. காணாமல் போனவர்கள் என்று சொல்ல முடியாதென்றால் எதற்காக அந்தப் பெயரில் ஒரு அலுவலகத்தை அரசாங்கம் நிறுவியது? எதற்காக இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டது? இதனை மறுக்கும் அதன் தலைவர் ஏன் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார்? இதற்கான பதில்களை எங்கிருந்தும் எதிர்பார்க்க முடியாதென்பதால் தமிழினப் படுகொலையின் வரலாற்றை மீள்நினைவுக்கு கொண்டு வரவேண்டியுள்ளது.

1950களிலிருந்து இன்றுவரை தமிழினப் படுகொலை தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. சிங்கள ஆட்சியாளர்களின் முன்னெடுப்பில் அவர்களின் படைத்தரப்புகள் இதனை மேற்கொண்டு வருகின்றன. ஆரம்பத்தில் இதனை தமிழர் மீதான தாக்குதல்கள் எனவே பலரும் பார்த்தனர். தமிழர்களின் கல்வி முன்னேற்றம், வாழ்க்கைத்தர உயர்வு, நாடு தழுவிய ரீதியிலான பொருளாதார வளம் போன்ற காரணங்களால் பொறாமையும் எரிச்சலும் கொண்ட சிங்களவர்கள் அவ்வப்போது தெற்கில் வசித்த தமிழர்களைத் தாக்குவதும் சொத்துகளை அழிப்பதும் சூறையாடுவதும் கொள்ளையடிப்பதுமாக இடம்பெற்றபோது அதனை இனஅழிப்பாகப் பார்க்கவில்லை.

தமிழ் மக்களின் உரிமைக்கான சாத்வீக ரீதியான போராட்டங்கள் இடம்பெற்ற காலங்களில் இதனை அரசியல் ரீதியான தாக்குதல்களாகப் பார்க்க முடிந்தது. தெற்கில் வசித்த தமிழர்களை துரத்தியடிக்கும் அல்லது அழித்தொழிக்கும் வன்மம் இதன் தொடர்ச்சியாது. அந்தக் காலங்களில் இதனை பொதுப்படையாக இனக்கலவரம் என்றே அழைப்பர். இரு தரப்பு ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்வதே கலவரம். அடிப்பது சிங்களவராகவும், அடி வாங்குவது தமிழராகவும் இருப்பதை இனக்கலவரம் என்று சொல்ல முடியாதென்பதை உணர்ந்து கொள்ள ஆண்டுகள் பல எடுத்தது. எண்ணுக்கணக்கில் தாங்களை பெரும்பான்மையினர் என கூறிக்கொண்ட சிங்களவர், ஆட்சித்தரப்பு தங்கள் இனம் சார்ந்ததாக இருந்ததால் தமிழரை இலக்கு வைத்து நடத்திய தாக்குதல்கள் பலவாறு அடையாளம் காணப்பட்டது. இனவாதம், இனச்சுத்திகரிப்பு, இனசங்காரம் என்பவைகளின் ஒட்டுமொத்தமாக இனஅழிப்பு தெரியவந்தது.

உள்நாட்டு யுத்தம் எனப்படும் 2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் உறைநிலைக்குச் சென்ற காலமே இப்போதைய பேசுபொருள் காலம். தமிழர் ஓர் இனக்குழுமம் என்ற வகையில் அவர்கள் மீது இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் இனப்படுகொலை அல்லது இனஅழிப்பு எனப்படும்.

'ஒரு தேசத்தை அல்லது ஒரு குழுவை அழிக்கும் நோக்குடன், ஒரு குறிப்பிட்ட தேசம் அல்லது இனக்குழுவைச் சேர்ந்த பெருமளவான மக்களை வேண்டுமென்றே கொலை செய்வது" இனஅழிப்பு என அதற்கான வரைவிலக்கணம் சொல்கிறது. அதன் ஆங்கில வடிவம் பின்வருமாறு "Thedeliberate killing of a large number of people from a particular nation or ethnic group with the aimof destroying that nation or group".

இலங்கையில் தமிழினப் படுகொலை நிகழ்ந்ததென்பதை ஆதாரப்படுத்தி உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வடமாகாண சபை 2015ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி இனப்படுகொலை என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகவிருக்கும் திரு. சி.வி.விக்னேஸ்வரன், அப்போது மாகாண சபையின் தலைவர் என்ற வகையில் தாமே இத்தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியிருந்தார்.

அத்துடன் இதனை ஜெனிவா மனித உரிமைப் பேரவைக்குச் சமர்ப்பித்து, இதன் கண்டறிவுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் மேல்நடவடிக்கைகளுக்காக பாரப்படுத்துமாறும் கோரியிருந்தார். இலங்கையின் அரசியல் சட்ட நியாயாதிக்கத்துக்குட்பட்ட வடமாகாண சபை நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தை முன்வைத்து இலங்கை அரசு இதுவரை எந்த நடவடிக்கையையும் விக்னேஸ்வரன் மீது எடுக்கவில்லையென்பதை கவனிக்கலாம்.

புலம்பெயர்ந்துள்ள தமிழர்களில் கூடுதலானவர்கள் கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் வாழ்கின்றனர். ஒன்ராறியோ மாகாண சட்டசபை 2019ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்றது தமிழினப் படுகொலை என்பதை ஏற்றுக் கொள்ளும் தீர்மானமொன்றை சட்டமாக்கியது. விஜே தணிகாசலம் என்ற உறுப்பினர் முன்மொழிந்த இந்தத் தீர்மானமானது, ஒவ்வொரு வருடமும் மே மாதம் 18ம் திகதியை முதன்மைப்படுத்தி வரும் அடுத்த ஏழு நாட்கள் தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரமென கொள்ளப்படுமென்பதை அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் பேராதரவுடன் சட்டமாக்கியுள்ளது.

இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த கனடாவாழ் சிங்கள சமூகத்தவர்கள் சிறீலங்கா அரசின் பின்பலத்துடன் ஒன்ராறியோ உச்ச நீதிமன்றத்தை நாடினர். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லையென்ற வாதத்தின் அடிப்படையில் ஒன்ராறியோ மாகாண சபை நிறைவேற்றிய சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென இது கோரியது. இது தொடர்பான நீதிவிசாரணை இவ்வருடம் மே மாதம் 24ம் 25ம் திகதிகளில் நீதியரசர் ஜே.ரி.அக்பரலி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இவ்விசாரணையில் முக்கியமான ஒருவராக ரொறன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் அமுது யோசப் சந்திரகாந்தன் சாட்சியமளித்தார். இலங்கையின் பல்சமய விவகாரங்களில் நிபுணத்துவ சாட்சியாளராக கனடிய உச்ச நீதிமன்றம் 1993ல் இவருக்கு அங்கீகார நியமனம் வழங்கியதால், இவரது மூன்று மணித்தியால சாட்சிய விசாரணை முக்கியமானதாகக் கருதப்பட்டது.

'இலங்கையில் தமிழினத்தை வேரோடு அழிக்கும் இனப்படுகொலை 2000 ஆண்டுகளுக்கு முன்னர் புத்த மதத்தின் ஆசீர்வாதத்தோடு துவங்கியது. சிங்கள மன்னன் துட்டகைமுனு 10,000 தமிழர்களை அநியாயமாக படுகொலை செய்தது பற்றி துயருற்றபோது, புத்த மதத்தைச் சாராததால் மொத்தமாக நீ அரை மனிதனையே கொன்றாய் என தலைமைப் பிக்கு மன்னனுக்கு ஆறுதல் கூறினாரென மகாவம்சம் குறித்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

இந்த மனப்போக்கின் இன்றைய தொடர்ச்சியான வெளிப்பாடுகளே 1983 இலும், அதற்கு முன்னும் பின்னுமாக அடிக்கடி இடம்பெற்ற தமிழினப் படுகொலைகளும், ராஜபக்ச சகோதரர்கள் தலைமையில் 2009 வைகாசி மாதத்தில் உச்ச நிலை எய்திய தமிழினப் பேரழிவும் கொடுங்கொலைகளுமாகும்" என்று நீதி விசாரணையில் பேராசிரியர் சந்திரகாந்தன் தமிழினப் படுகொலையை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். மேலும் பலரது சாட்சிய விசாரணைகளையடுத்து சிங்கள தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்ற நீதியரசர் தள்ளுபடி செய்தார்.

இனஅழிப்பு என்பதன் உள்ளடக்கத்தில் மனித குலத்துக்கு எதிரான யுத்தம், இனரீதியான தாக்குதல், போர்க்குற்றம் என்பவைகளை ஐக்கிய நாடுகள் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. போர்க்குற்றவாளி என்ற அடிப்படையில் ராணுவத் தளபதியான சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா பயணத்தடை விதித்துள்ளது. இதனை தமிழினப் படுகொலையாளி ஒருவருக்கு வழங்கப்பட்ட தண்டனையாகப் பார்க்கலாம்.


கடந்த செப்டம்பரில் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51:1 இலக்கத் தீர்மானம் சுமார் ஐம்பது வரையான படைத்துறை அதிகாரிகளை போர்க்குற்றவாளிகளாக அடையாளம் காட்டி, உறுப்பு நாடுகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியுள்ளதானது இலங்கையில் தமிழினப் படுகொலை இடம்பெற்றதென்பதை சர்வதேச ரீதியில் பதிவிடும் தடத்தில் நிறுத்தியுள்ளது. காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், தமிழினப் படுகொலை என்பவைகளை நோக்கி சர்வதேச அளவில் பல நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகையில், "ஸ்குயர் வண்" என்பது போல எல்லாவற்றையும் மீண்டும் ஆரம்ப இடத்துக்குக் கொண்டு சென்று இல்லாதொழிக்கும் முயற்சிகளை ரணில் அரசு மேற்கொள்கிறதா என்கிற சந்தேகம் எழுகிறது. இவ்விடயம், ஒன்றுபடாது பிளவுபட்டு நிற்கும் தமிழ்த் தலைமைகளுக்கு சமர்ப்பணம்.

**பனங்காட்டான்**



# இலங்கை அமெரிக்காவின் காலணித்துவ நாடாக மாற்றம் பெறலாம்

அனைத்துலக நாடுகளினதும் பிரச்சினைகளில் ஒன்றுதான் அமெரிக்க நாட்டின் தலையீடாகும். முழு அரபு இராச்சியத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதே அமெரிக்காவின் தற்போதைய இலக்காகும். அதனொரு கட்டமாகவே அமெரிக்காவின் அண்மைக்கால செயற்பாடுகள் அமைகிறது எனலாம். தற்போது அதனது தேவை கருதி பிரச்சினையை இலங்கை பக்கம் திருப்பிவிட்டுள்ளது. அது எவ்வாறெனில் 10 வருடங்களுக்குப் பின்னர் இலங்கையை தனது காலணித்துவ நாடாக மாற்றியமைப்பதற்கான திட்டமாகும். ஆரம்பகாலத்தில் இலங்கை மன்னராட்சிக்கும் அதனைத்தொடர்ந்து அந்நியராட்சிக்கு உட்பட்ட நாடாகவே காணப்பட்டது. 1505 - 1658 ஆம் ஆண்டுவரை போர்த்துக்கேயரும், 1958 -1796 வரை ஒல்லாந்தரும், 1796 - 1948 வரை ஆங்கிலேயரும் இலங்கையை ஆட்சி செய்து வந்தனர்.



போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களைக் கைப்பற்றினார்களே தவிர அவர்களினால் கண்டி இராச்சியத்தை கைப்பற்றமுடியவில்லை. அத்துடன் இவர்கள் சட்டம், சமயம் ஆகிய துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் அரசியலில் பாரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை. ஆங்கிலேயர் கரையோரங்களை கைப்பற்றியது மாத்திரமின்றி கண்டி இராச்சியத்தினையும் கைப்பற்றி, பொருளாதார ரீதியிலும் பல மாற்றங்களைக் கொண்டுவந்தனர். அதுவே இன்று அத்துறையில் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்திக்கு காரணமாகும். அரசியலில் பிரித்தானியா மாதிரியான பாராளுமன்ற ஆட்சி முறைமையையும், பொருளாதாரத்தில் பெருந்தோட்டத்துறையில் ஏற்றுமதி இறக்குமதி கொண்ட பொருளாதாரத்தையும் உருவாக்கினர்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட இம்மாற்றங்களே இன்றைய இலங்கையின் நிலைக்குக் காரணமாக உள்ளது. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு பிரித்தானியா இலங்கையின் பெரும்பாலான கரையோரங்களைக் கைப்பற்றினாலும் 1798 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

1798 - 1802 ஆம் ஆண்டுவரை இலங்கையில் நடைபெற்ற ஆட்சி இரட்டையாட்சியாகும். அதாவது வரி, வர்த்தகம் போன்ற விடயங்களுக்கு பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனிகள், பாதுகாப்பு சிவில் போன்ற விடயங்களுக்கு பிரித்தானிய அரசையும் இணைத்து கொண்டு செய்த ஆட்சி தான் இரட்டை ஆட்சியாகும். 1892 இல் கைச்சாத்திடப்பட்ட எமினியஸ் உடன்படிக்கையைத் தொடர்ந்து இலங்கை பிரித்தானிய காலணித்துவத்திற்கு உட்பட்ட நாடாக மாறியது.

இந்த முறைமையினை மாற்றி அமெரிக்கா தனது காலணித்துவத்துக்குக்கீழ் உட்பட்ட நாடாக இலங்கையை மாற்றியமைக்க தீர்மானித்துள்ளது. இலங்கையின் அனைத்து நிர்வாக விடயங்களும் பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. அவருக்கு ஆலோசனை கூற ஒரு சபை உருவாக்கப்பட்டது. அதில் இராணுவத்தளபதி, குடியேற்ற நாட்டு காரிய தரிசி, பிரதம நீதியரசர்கள் போன்றோர் இடம்பெற்றனர்.

1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தினை கைப்பற்றும் நோக்கில் பிரித்தானிய படையெடுப்பொன்று மேற்கொண்ட போது, கண்டியர்களின் கொரில்லாத்தாக்குதல், மலேரியா நோய், காட்டுநோய் போன்றவற்றின் காரணமாகவும் சீரற்ற காலநிலை காரணமாகவும் போராட்டம் தோல்வியடைந்தது. பிரித்தானியர் கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்ற முனைந்தபொழுது கண்டி பிரதானிகளின் சில நிபந்தனைகளுக்கு உடன்பட்டிருந்தது. கண்டி இராச்சியம் தனியாக ஆளப்படும். பௌத்த மதம் அரச ஆதரவோடு தொடர்ந்தும் உரிய முறையில் பேணிப்பாதுகாக்கப்படும். அதே போன்று இன்றைய காலகட்டத்தில் அமெரிக்க அரசு இலங்கையரசுடனான இரகசிய பேச்சுக்களை அரச இராஜதந்திரிகளுடன் பேசிவருகிறது.

ஏற்கனவே அமெரிக்க அரசு இலங்கையில் அமைந்துள்ள திருகோண மலை, கொழும்புத் துறைமுகங்களை, கடற்கரையோரங்களை தன்னகத்தே கொண்டுவர முயற்சித்து வருகிறது. இதற்கு முட்டுக்கட்டையாக இந்தியா,சீனா போன்ற நாடுகள் விளங்குகின்றன. பலமுறை அமெரிக்க அரசு இலங்கை அரசுடன் இரகசிய பேச்சுக்களை நடத்திய போதிலும் அவை சாத்தியமற்றுப்போயின. ஆனால் தற்பொழுது மீண்டும் ஒரு உலகப்போர் ஏற்படுமானால் ஆசியப்பிராந்தியத்தில் தனக்கான ஒரு தளம் இல்லாமல் போகும் என்கின்ற காரணத்தினால் தனது போர் வியூகங்களை சரியாக செய்யமுடியாமையினாலும் அமெரிக்க அரசு இலங்கையரசிற்கு பல நிபந்தனைகளைக் கொடுத்துள்ளது.

போர்க்குற்றம் தொடர்பில் இலங்கையரசை ஆரம்பகட்டத்தில் நெருக்கிய அமெரிக்கா தற்பொழுது அதனை தளர்த்திவிட்டுள்ளது. காரணம் அமெரிக்கா எவற்றையெல்லாம் கேட்கிறதோ அவற்றையெல்லாம் தருவதற்கு இலங்கையரசு தயாராக இருக்கிறோம் என வாக்குறுதியளித்தமையினாலேயே. இன்று இலங்கையரசு போர்க்குற்றம் தொடர்பில் துணிவான அறிக்கைகளை தெளிவாக வெளியிட்டிருக்கின்றது. போர்க்குற்ற விசாரணைகளை முழுமுரமாக நின்று செயற்படுத்தியது அமெரிக்காதான். ஆனால் தற்பொழுது ஓரமாக ஓதுங்கியுள்ளது. அரசியல் இலாபத்திற்காக எமது தாய்நாட்டை அந்நியர்களின் காலணித்துவத்திற்கு உட்படுத்தும் ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.



அமெரிக்கா தான் நினைத்ததை சாதித்துவிடும் பட்சத்தில் ஒரு சர்வாதிகார போக்கை கடைப்பிடிக்கும் நிலைமை ஏற்படும். இதேபோன்றே அக்காலகட்டத்தில் பிரித்தானியர்களும் செய்தார்கள். கண்டி இராச்சியம் தொடர்பாக 1818ஆம் ஆண்டில் கண்டியில் ஓர் கிளர்ச்சி ஏற்பட்டது. அதனை வெள்ளைக்கிளர்ச்சி என்பர். பிரித்தானிய இராணுவத்தினரால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர். இந்த நிலையில் 1827இல் இலங்கையின் நிர்வாகத்தை சீர்படுத்துவதற்காக எதிர்காலத்தில் கண்டிக்கலவரம் போன்ற பெரியதொரு கலவரம் வரக்கூடாது என்பதற்காகவும் முழு இலங்கையையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதற்காகவும் பெருந்தோட்டத்துறையை தனியாருக்கு தருவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கூறப்பட்ட கொள்கைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதாக கோல்புறூக் ,கமரூன் தலைமையில் ஒரு குழு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அக்குழுவினர் இலங்கையில் சில காலம் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரை சந்தித்து குறிப்பாக கமரூன் சட்டம், நீதி தொடர்பாகவும் கோல்புறூக் அரசியல் தொடர்பாகவும் ஆராய்ந்து அதனடிப்படையில் அரசியல் அமைப்பொன்றை உருவாக்கினர்.

இதுவே 1833 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. இதுவே 1833 ஆம் ஆண்டில் கோல்புறூக்.கமரூன் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது. கோல்புறூக் ஆணைக்குழுவின் நிபந்தனைகள்:

**1. இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவருவதற்கு தேவையான வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சுதந்திரமான சந்தைச் சூழலை ஏற்படுத்தல்.**
**2. குடியேற்ற நாட்டாட்சி நிர்வாக அதிகாரிகள் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதை தடைசெய்தல்.**
**3. இலங்கை நிர்வாகத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவருதல்.**
**4. மலைநாட்டில் நிலவிய தனியான நிர்வாகத்தை முடிவுக்கு கொண்டு வருதல்.**
**5. இலங்கையின் நிர்வாகத்தை 05 மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்தையும் அரச அதிபர்களுக்கு கீழ் கொண்டு வருதல்.**
**6. இலங்கைக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் சுதேசிய உயர் வர்த்தக உறுப்பினரும் நிர்வாகத்தில் பங்கேற்கும் முகமாக பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளுதல்.**
**7. தேசாதிபதிய சட்ட நிர்வாக இணைத்து ஆட்சிபுரியும் ஒருவராக மாற்றல்.**

முக்கிய விடயம் என்னவென்றால் அமெரிக்காவின் காலணித்துவ நாடாக இலங்கை மாற்றமடையும் போது ஒரு சுதந்திரமான நீதித்துறையிலான உயர் நீதிமன்ற நீதிபதியொருவரை அமெரிக்க அரசினால் நியமிக்கப்படுவார் அதன்படி.

உயர் நீதிமன்ற தலைமையின் கீழ் ஒரு ஐக்கிய நீதிமன்றினை உருவாக்கல், மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்கல், சுதேசி அவர்களுக்கும் தனியாக இயங்கிவரும் நீதிமன்றங்களை உரிய நடவடிக்கை எடுத்தல், இலங்கையில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்.

1833-1910ஆண்டுவரை சுமார் 77 ஆண்டுகள் வாழும் கோல்புறூக் அரசியலில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இங்கு உருவாக்கப்பட்ட சட்டமன்றம் எதிர்காலத்தில் பாராளுமன்றம் உருவாக வழியமைத்துக்கொடுத்தது. இதன் காரணமாக பிரதிநிதித்துவ முறைமை அறிமுகமானது. தேசாதிபதியிடம் செறிந்து காணப்பட்ட அதிகாரங்கள் சட்ட நிரூபண சபையிடமும் சட்ட நிர்வாக சபையிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆங்கிலக்கல்வி அறிமுகமானது. ஆங்கிலம் கற்ற உயர் மத்தியினர் எழுச்சிபெறச்செய்தனர்.

வலுவேறா கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த அரசியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. பொருளாதார விடயத்தில் தனியொரு பங்கேற்பான வாய்ப்பு இடம்பெற்றது. இதனால் இந்திய பாகிஸ்தானிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுசெய்தனர்.

இதன் காரணமாகவே இலங்கையில் ஆங்கிலம் பேசுவோரின் தொகை அதிகரிக்கத்தொடங்கியது. கலாசாரம் மாற்றம் பெறத் தொடங்கியது. இந்த யாப்பு திருத்தம் தொடர்பில் ஏற்பட்ட குறைபாடுகளை பாரக்கின்றபொழுது,


1. பொருளாதார முறைமையின் காரணமாக கரையோர விவசாய முறைமை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டது.
2. ஆங்கிலக்கல்வியின் பரவல் இலங்கையின் பாரம்பரிய கலாசாரத்தை சீர்குழைப்பதாக அமைந்தது. இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவம் பல குறைபாடுகளைக் கொண்டதாக காணப்பட்டது.

இவ்வரசியல் சீர்திருத்தம் இலங்கைக்கு பொருத்தமானதாக அமையவில்லை. 77 ஆண்டு காலமாக இந்த கோல்புறூக் அரசியல் இருந்து வந்தது. தற்பொழுதும் பல அரசியல்வாதிகளாலும் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் மாற்றம் ஒன்று இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை அடிப்படையாக வைத்துப்பார்க்கின்ற பொழுது. மாட்டுக்கு மணிகட்டப் போவது யார்? அது அமெரிக்காவாகத்தான் இருக்கும். அக்காலம்தொட்டு இன்று வரைக்கும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமான தொடர்புகள் இருந்த வண்ணமே உள்ளன. இவை படிப்படியாக தோற்றம் பெற்று ஆசியப்பிராந்தியத்தில் தனக்கு ஒரு பிரச்சினை வருகின்ற பொழுது அதனை மாத்திரம் கரிசனை கொண்ட இலங்கை அரசின் மீது அமெரிக்கா பல நெருக்கடிகளை கொடுக்கிறது.

எந்தவொரு நாட்டிற்கும் நாம் அடிபணியப்போவதில்லை என சவால் விட்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அவ்வாறே நடந்து கொள்வாராக இருந்தால் அமெரிக்க காலணித்துவம் உருவாவதை தடுத்து நிறுத்தமுடியும் இல்லையெனில் இலங்கை தேசம் ஒரு சோசலிசத்தை நோக்கிச்செல்லும் அதேவேளை தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் எவ்வாறு தொழில் செய்து வாழ்கிறார்களோ அவ்வாறான நிலைமையே ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

**இரணியன்**

# எதிர்வரும் காலங்களில் தேர்தலை எதிர்கொள்ள தமிழ் அரசியல்வாதிகள் தயாரா?




இலங்கையின் இன்றைய நெருக்கடிச் சூழலில் தேர்தல் என்பது தேவைதானா என்கின்ற கேள்வி எழுகின்றபோதிலும், ஏற்கனவே மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றிற்கானத் தேர்தலை நடாத்தாமல் கடந்த கால அரசுகள் இழுத்தடிப்புச் செய்தமை ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடாகும். மாகாண சபைகளுக்கானத் தேர்தல் குறித்து உள்ளூ ரிலும், சர்வதேசப் பிரதிநிதிகளாலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டே வருகின்றது. நாட்டின் பிரதான எதிர்க்கட்சியினர் தேர்தலை நடாத்துமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். தெற்கின் பிரதான ஏனைய கட்சிகளும், வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் - முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் தேர்தலை வைக்குமாறு வலியுறுத்தும் அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு என அரசால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மக்களால் கடுமையான அதிருப்தி தொடர்ந்தும் வெளிப்படுத்தப்படுகின்றது.

எனினும் இனிவரும் காலங்களில் மிக விரைவாக வரக்கூடியத் தேர்தலாக நாம் மாகாண சபைகளுக்கானத் தேர்தலையும், உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலையும் சுட்டிக்காட்டலாம். ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் உடனடியாக நடைபெற வாய்ப்பில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் விரைவில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை நடாத்தக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. ஏற்கனவே சுக்குநூறாக உடைந்துள்ள தனது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்வரும் காலங்களில் பலப்படுத்துவதற்கும், தனது வேலைத்திட்டங்களை கிராமந்தோறும் கொண்டுசெல்வதற்கும் தனது கட்சியின் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர். பாராளுமன்றில் ஒரேயொரு ஆசனத்தைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினர் தமக்குக் கிடைத்துள்ள உயர் பதவியை வைத்துக்கொண்டு கட்சியைப் பலப்படுத்த திட்டம் தீட்டியுள்ளனர்.

அதனொரு கட்டமாகவே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பிரதமர் தினேஸ் குணவர்தன உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான எல்லைகளை நிர்ணயத்திற்கான தேசிய குழுவொன்றை நியமித்துள்ளார். அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவின் பணிகள் நவம்பர் மாதம் முதல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அடுத்த வருடமளவில் மாகாண சபைகளுக்கானத் தேர்தல் நடைபெற வாய்ப்பு இருப்பது உறுதிப்படுத்தப்படும் அதேவேளை, தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது பதவிக்காலத்தை தக்கவைப்பதற்கான முயற்சிகளை தீவிரமாக முன்னெடுத்துள்ளார்.

தெற்கில் சிங்கள மக்கள் மஹிந்த தரப்பினர் மீதும், மொட்டுக் கட்சியினர் மீதும் அடைந்துள்ள அதிருப்தி காரணமாக தேர்தல் ஒன்றினை முகங்கொடுக்கும் போது அக் கட்சியும் ராஜபக்ச தரப்பினரும் பாரிய பின்னடைவைச் சந்திப்பார்கள் என்பது உண்மை. ஏற்கனவே தெற்கின் பாரம்பரியக் கட்சிகள் இன்று பிளவடைந்துள்ள சூழலில் மக்கள் குழப்பமடைந்துள்ளார்கள். நாட்டின் பொருளாதாரச் சூழலும் வேலைவாய்ப்புக்காக நாட்டைவிட்டு வெளியேறும் மக்கள் தொகை அதிகரிப்பும் எதிர்வரும் காலத்தில் இலங்கையின் எந்தத்தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எது எவ்வாறிருப்பினும், இவ் அரசாங்கத்தின் மூலமாக மாகாண சபைகளுக்கானத் தேர்தல் நடாத்தப்படுகின்றபோது தமிழ்த் தரப்புக்கள் இத் தேர்தலை எதிர்கொள்ள தயாராக இருக்கிறார்களா? என்கிற கேள்வி எழுகையில் பதில் இல்லை. யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் ஒற்றுமை என்கிற விடயத்தில் இருந்து தமிழ்க் கட்சிகள் சிதைவடைந்துள்ளன. விடுதலைப்புலிகளால் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு வளர்த்துவிடப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற கட்சி இன்று சின்னாபின்னமாக உடைக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தரப்பினர் அரசியல் ரீதியாக பலமிழந்துள்ளனர். இன்றிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற பெரு விருட்சத்தை உடைத்துக்கொண்டு வெளியில் வந்து தமக்கென ஆளுக்கொரு கட்சியினை இன்று உருவாக்கியுள்ளனர். இதனால் தமிழினத்திற்கான பயன் என்ன?

தமிழ் மக்கள் கடந்த பத்து வருடங்களில் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டிருக்கிறதா என்றால் இல்லை. இன்றும் வடக்கு கிழக்கு எங்கிலும் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன ஆட்சியாளர்கள் கண்டும் காணாதது போல தமது செயற்பாடுகளை திறம்பட செய்கின்றனர். சிங்களப் பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல் தமிழ் மக்கள் தொடர்பில் அக்கறைகொள்ளவில்லை. தீர்வுகளை வழங்கவில்லை. இழுத்தடிப்பு செய்கிறது. காணி சுவீகரிப்பும் பௌத்த மயமாக்கலும் நாட்டின் உயரிய சட்டதிட்டங்களை மீறி சிங்கள பௌத்த பேரினவாதத்தால் தமிழர் பிரதேசங்களில் அமுல்படுத்தப்படுகிறது.

இவ்வாறான பல நெருக்கடிப் பிரச்சினைகளை - வாழ்வாதாரப் பிரச்சினைகளை - சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தமிழர் பிரதேசம் பல எதிர்பார்ப்புக்களை முன்வைத்தே தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கும், மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்குமென வாக்களிப்பின் மூலமாகத் தெரிவுசெய்து அனுப்பிவைக்கிறது. ஆனால் பின்னர் தமிழ்ப் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் தொடர்பில் வாக்களித்த மக்கள் அதிருப்திடைந்து வீதிகளில் இறங்கி போராட்டங்களை முன்னெடுக்கும் சூழலும் மக்களது போராட்டங்களில் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு, தமது முகங்களை ஊடகங்களுக்கு செவ்வி கொடுக்கப் பயன்படுத்துகின்றனர். மத்தி எமக்காக செய்யாத விடயங்களை, எமது பலத்தின் ஊடாக அழுத்தம் பிரயோகித்துச் செய்யவேண்டிய நிலை இருக்கிறது. உள்ளூ ரிலும் சர்வதேச ரீதியாகவும் நாம் இன்னும் பலமாக இறங்கி வேலை செய்யவேண்டி இருக்கிறது. முதன் முதலாக பிரிந்த நிலையில் வடக்கு மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டபோது தமிழ் மக்கள் பலத்த எதிர்பார்ப்புடன் வரவேற்றதற்கு காரணம் தமது பிரச்சினைகளுக்கானத்தீர்வினை தமிழ் மக்கள் எதிர்பார்த்தது தான். உள்ளூரிலும் சர்வதேச ரீதியாகவும் அழுத்தம் கொடுத்து எதிர்க்கவும், பலத்தை நிரூபிக்கவும் தான். ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் அமைந்த முதலாவது வடக்கு மாகாண சபையில் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டு பலவாறாக எழுந்தது. பல அமைச்சர்கள் ஊழல்வாதிகளாக அடையாளப்படுத்தப்பட்டதும் கட்சிகளுக்குள் ஏற்பட்ட உட்பூசல்களும் பெரும் சர்ச்சையாக வெடித்தது. மறுபுறம் இங்கு தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாகவும், நடந்தது இனப்படுகொலை தான் என்கிற தீர்மானம் உத்தியோகபூர்வமாக நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானம் ஐ.நாவுக்கும் அனுப்பப்பட்டது. இலங்கையில் முதன் முறையாக மாகாண சபை ஒன்றில் இவ்வாறான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை வரலாற்றுப் பதிவாகும்.

அரசியலில் எவ்வாறான சிக்கல்கள் வந்தாலும் இவ்வாறான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மாகாண சபையின் ஊடாக தமிழ் மக்களுக்காக செயற்படுத்தப்படுகின்ற போது வரவேற்கப்படும் அதேவேளை பின்னரான இவ் மாகாண சபையில் பங்கெடுத்த கட்சிகளின், உறுப்பினர்களின் செயற்பாடுகள் இன்று தலைகீழாக மாறியுள்ளது. அத் தீர்மானத்தை எதிர்காலத்தில் பலமாக முன்கொண்டு அடுத்த கட்டம் நோக்கி எடுத்துச்செல்வதற்கான வேலைத்திட்டங்கள் இன்று பூச்சியமாக்கப்பட்டுள்ளது. கருத்து முரண்பாடுகளால் ஒற்றுமையின்மை அனைத்தையும் சீரழித்துள்ளது. அன்று முதல்வராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்து கொணர்ந்த விக்னேஸ்வரன் அவர்கள் பின்னர் அக்கட்சிக்குள் நிலவிய குழப்பங்களும் முரண்பாடுகளும் காரணமாக இன்று தனக்கென தனித்து ஒரு கட்சியினை உருவாக்கியுள்ளார். மாகாண சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்களில் சிலரும் தனித்துக் கட்சிகளை உருவாக்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பின்னரான தமிழ் மக்களின் அரசியல் போக்கு மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒற்றுமை என்பது எட்டாக்கனியாகியுள்ளது. பிரிந்துகிடக்கும் தமிழர் தேசம் ஒற்றுமையின்மையால் பல இன்னல்களை தெற்கின் சிங்களப் பேரினவாதிகளால் எதிர்கொள்கிறது. தத்தமது தேவைக்காகவும் சுயநலத்திற்காகவும் தமிழ் மக்களை கூறுபோட்டு விற்க இவர்கள் ஆரம்பித்துள்ள செயற்பாடானது ஏற்புடையதல்ல. தமிழ் மக்களுக்கென வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட கட்டமைப்புக்கள் சிதைவடைந்துள்ளமையால் அரசியல் பலமும் நலிவடைந்துள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பினையும் மீறி அரசின் ஒரு சில போலியான வாக்குறுதிகளை நம்பி அரசிற்கு துணைபோன தமிழ்க் கட்சிகள் தொடர்பில் இன்று மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இன்னொருபுறம் தமிழ் அரசியல்வாதிகள் பலர் அரச கட்சிகளுடன் இணைந்து பயணிக்கும் நிலை தொடர்கின்றது. இவர்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்து அரசிடம் பேசி அல்லது எதிர்த்து அழுத்தம் பிரயோகிக்க முடியும். அன்று அரசை முழுதாக எதிர்த்த விடுதலைப்புலிகளால் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து 22 உறுப்பினர்களை பெருவாரியாக பாராளுமன்றத்திற்கு முதன் முறையாக அனுப்ப முடிந்தது. அன்று அரசியலில் பலம் பெற்றிருந்த தமிழினம், விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனித்ததன் பின்னர் இன்று பத்து பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதே கடினமான விடயமாக மாறியுள்ளது. இந்நிலை ஏன் யாரால் ஏற்பட்டது என்பது குறித்து தமிழ் அரசியல்வாதிகள் சிந்தித்தது உண்டா?

தெற்கில் சிங்களக் கட்சிகள் மாத்திரமல்ல, வடக்கு - கிழக்கில் தமிழ்க் கட்சிகளும் தேர்தல் ஒன்றின் நிமித்தமாக கூட்டங்களை வைப்பதற்கும், சந்திப்புக்களை வைத்து கலந்துரையாடுவதற்கும், வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்வதற்கும் முடியாத சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக சிரமப்படும் மக்கள் ஒருபுறம், அரசியல் ரீதியாக பலமிழந்து சிதைக்கப்பட்டுள்ள தமிழினம் மறுபுறம் என நிலைமை மாறியுள்ளது. இச்சூழலை எவ்வாறு தமிழ் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளப்போகின்றனர். அதிருப்தியடைந்துள்ள மக்கள் கூட்டத்தின் முன்னால் இவர்கள் தமது முகங்களைக் காட்ட முடியாமல் திண்டாடி வருவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. இந்தியாவால் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையால் தமிழினம் பயன் ஒன்றையும் பெரிதாக அடைந்துவிடவில்லை. மாகாணத்திற்கென அரசால் நியமிக்கப்படுகின்ற ஆளுநரே மாகாணத்தின் அதிபதியாக இருக்கிறார். அவரை மீறி மாகாண சபையால் எதனையும் செய்ய முடியாத சூழல் இருக்கிறது. தமிழ் மக்களுக்கும் - ஆளுநருக்கும் எவ்வித தொடர்பினையும் காண முடிவதில்லை. வடக்கு மற்றும் கிழக்கிற்கு சம்பந்தமேயில்லாத ஒருவரே மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்படுகின்றார். அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசுடன் பேசவோ, தீர்வு குறித்துச் சிந்திக்கவோ மாட்டார். அரசு சொல்கின்றதைச் செய்யவே அவர் இருக்கிறார். இவ்வாறான சூழலில் கிடைக்கக்கூடிய அதிகாரங்களை, இருக்கக்கூடிய வளங்களை தமிழினத்தின் பிரதிநிதிகள் சரிவரப் பயன்படுத்தத் தவறி வருகின்றனர்.

அனைவரும் கூட்டாக ஒன்றிணைந்து தமிழினத்திற்கான அடுத்த கட்ட அரசியல் - சமூக செயற்பாடுகளில் பங்கெடுக்க இன்றும் தயாராக இல்லை. கருத்து வேறுபாடுகளும் உட்கட்சிப் பூசல்களும் சுயநலப் போக்கும் தமிழர் அரசியலில் மேலோங்கியுள்ளது. கட்டுப்பாடற்ற நிலையில் அரசியல் போக்கு பயணிக்கிறது. நீ கூறி நான் கேட்பதா என்கிற நிலை. எதிர்வரும் காலங்களில் கட்டாயம் தேர்தல்களைச் சந்திக்கவேண்டிய நிலை இருக்கிறது. தமிழ் மக்கள் உங்களுக்கான வாய்ப்புக்களை ஒவ்வொரு வருடமும் வழங்கிக்கொண்டேயிருக்கிறார்கள். தேர்தலை புறக்கணிப்புச் செய்வது தமிழினத்தின் நோக்கமல்ல. ஆனால் புதியவர்களைத் தேர்ந்தெடுக்கும் போக்கு கடந்த காலங்களில் அவதானிக்கப்பட்டது.

எனவே கடந்த காலங்களில் நீங்கள் செய்த அத்தனை தவறுகளையும் மக்கள் மன்னிக்கவேண்டுமாயின் நீங்கள் உங்களது சுயநலத்தையும், முரண்பாடுகளையும், உட்கட்சி மோதல்களையும் தலைமுழுகிவிட்டு தமிழினத்திற்காக மீண்டும் ஒரே குடையின் கீழ் வரவேண்டும். இன்றும் தமிழினம் விரும்புவது ஒற்றுமையைத்தான். ஒற்றுமையின் நிமித்தமாக உள்ளூரிலும் சர்வதேச ரீதியாகவும் பல மாற்றங்களை கட்டாயம் செய்யலாம். இதனை தமிழ் ஆய்வாளர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். ஆளுக்கொ. கட்சிக்கென தனித்தனி கொள்கைகளை - நிகழ்ச்சிநிரல்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதை விட்டுவிடுங்கள். தமிழினத்திற்காக ஒரே கொள்கையில் - ஒரே நிகழ்ச்சிநிரலில் அணிதிரளுங்கள். தமிழ் மக்கள் உங்களை ஏற்றுக்கொள்ளவும், உங்களுக்கான வாய்ப்புக்களை வழங்கவும் இன்றும் தயாராகவே இருக்கிறார்கள்.

**சசிகரன்**



# பிராந்திய செய்திகள்



## டீசல், மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிப்பு

டீசல் லீற்றர் 15 ரூபாவாலும் மண்ணெண்ணெய் லீற்றர் 25 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி டீசலின் புதிய விலை 430 ரூபாவாகவும் மண்ணெண்ணெயின் புதிய விலை 365 ரூபாவாகவும் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 1,025 பேர் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக கடந்த 24 மணித்தியாலத்தில் 305 குடும்பங்களை சேர்ந்த1,025 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடானது பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

கரவெட்டி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மருதங்கணி மற்றும் சாவச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிப்புகள் கூடுதலாக ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கூடுதலான பாதிப்பாக 201 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பொலிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெயர்ந்த 14 குடும்பங்களை சேர்ந்த 46 பேர் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 54 குடும்பங்களை சேர்ந்த 171 பேர் வெள்ளம் காரணமாக பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குரிய சமைத்த உணவு மற்றும் தங்குமிடவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

## இலங்கை மத்திய வங்கி விசேட அறிவிப்பு

கடந்த ஒக்டோபர் மாதம் வெளிநாட்டு பணவனுப்பல்கள் 355.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஜனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் 2,929.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டு மோசடி செய்தமை தொடர்பில் 570 முறைப்பாடுகள்

வெளிநாடுகளில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் குறித்து இந்த வருடம் ஜனவரி முதல் ஒக்டோபர் வரை 570 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கிறது.




அவற்றில் 182 முறைப்பாடுகள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும், மோசடியான முறையில் அறவிடப்பட்ட 2 கோடியே 83 இலட்சத்து 83 ஆயிரம் ரூபா பணத் தொகையை முறைப்பாட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி சம்பவங்கள் தொடர்பில் பணியகம் செய்த முறைப்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட 17 சுற்றிவளைப்புகளில் 43 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பணியகம் மேலும் குறிப்பிடுகிறது.

## ஏழு மாகாணங்களில் டெங்கு அதிக ஆபத்துள்ள வலயங்களாக அடையாளம்

நாட்டின் ஏழு மாகாணங்களில் உள்ள பல பிரதேசங்கள் டெங்கு அதிக அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமீபத்திய தரவுகளின்படி கொழும்பு மாவட்டத்தில் பிலியந்தலை, ஹோமாகம, மஹரகம, பிட்டகோட்டே, கடுவெல மற்றும் கொதடுவ பிரதேசங்கள் டெங்கு அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.



கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்லை, பியகம, திவுலப்பிட்டிய, ஜா-எல, மற்றும் களனி உள்ளிட்ட 13 சுகாதார மருத்துவ பிரிவு பகுதிகள் டெங்கு அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் பேருவளை மற்றும் களுத்துறை சுகாதார மருத்துவ பிரிவு பகுதிகளும் டெங்கு அதிக அபாய வலயங்களாகும்.

கண்டி மாவட்டத்தில் உள்ள மூன்று சுகாதார மருத்துவ பிரிவு பகுதிகளும் டெங்கு அதிக ஆபத்துள்ள வலயங்களாக உள்ளன. அதே சமயம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதே எண்ணிக்கை உள்ளது.

இலங்கையில் 2022 இல் இதுவரை 63,500 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மேலும் இவற்றில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## பாடசாலை மாணவியை கொடூரமாக தாக்கிய ஆசிரியை கைது!

மில்லெனியவில் உள்ள பாடசாலையொன்றில் 5ஆம் வகுப்பு மாணவர்களை சித்திரவதை செய்த சம்பவத்தின் சூடுதணியும் முன்னரே, இதேபோன்ற மற்றொரு சோகச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது. தரம் 5 இல் கல்வி பயிலும் சிறுமி மீது இவ்வாறு மற்றுமொரு கொடூர தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவரினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அன்று (10) அம்பலாந்தோட்டை லுனம துடுகெமுனு மகா வித்தியாலயத்தில் 5 ஆம் தரத்தில் கல்வி கற்கும் தமது மகளை ஆசிரியர் ஒருவர் கொடூரமான முறையில் தாக்கிய சம்பவம் தொடர்பில் அவரது பெற்றோர் ஹுங்கம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.




இந்த ஆசிரியர் சிறுமியின் முதுகில் கம்பினால் கொடூரமாக தாக்கியதாக தாய் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். முதலில், சிறுமி தனது தாயிடம் உண்மைகளை மறைக்க முயன்றுள்ள போதும் சிறுமியின் முதுகில் காயங்களைக் கண்ட தாய் விசாரித்ததில் சிறுமி நடந்த சம்பவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் சிறுமி தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பும் பல சந்தர்ப்பங்களில், ஆசிரியர் சிறுமியின் தலைமுடியை இழுத்து தாக்கியுள்ள காரணத்தால் சிறுமியின் தாய் சிறுமியின் தலை முடியை வெட்டி பாடசாலைக்கு அனுப்பி வைத்துள்ள சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பாக பெற்றோர் செய்த முறைப்பாட்டையடுத்து ஹுங்கம பொலிஸாரால் (10.11.2022) பிற்பகல் குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். அன்று (11) அக்குனகொலபெலஸ்ஸ நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆசிரியர் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாபாவிடம் "அத தெரண" வினவியது. சம்பவம் தொடர்பில் மாகாண கல்வி அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், திங்கட்கிழமை இடைக்கால அறிக்கை கிடைத்த பின்னர் ஆசிரியர் தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சிறுவர் வன்முறை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாதிவெல தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முன்பாக மௌன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## மதுபோதையில் பயணிகள் பேருந்தை செலுத்திய இ.போ.ச. சாரதி கைது!

மதுபோதையில் பயணிகள் பேருந்தை செலுத்தி சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி மற்றும் நடத்துனர் புளியங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை (11) அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தினை செலுத்திய சாரதி மது போதையில் இருந்துள்ளார்.




சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் புளியங்குளம் பகுதியில் மாலை 6 மணியளவில் குறித்த பேருந்தினை மறித்து சாரதியை பரிசோதித்துள்ளனர்.

அதன் போது சாரதி மது போதையில் இருந்தமையை உறுதி செய்ததையடுத்து அவரை கைது செய்தனர்.

பேருந்து புளியங்குளம் பொலிஸ் நிலையத்திலும் சாரதி மற்றும் நடத்துனர் இருவரையும் பரிசோதனை செய்வதற்காக வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

## எதனோல், கள் என்பவற்றுக்கான வரிகளை அதிகரிக்க தீர்மானம்

கொவிட் தொற்று நோய் காலத்தில் குறைக்கப்பட்ட கிருமி நாசினி தயாரிப்பதற்கு உபயோகிக்கும் எதனோலுக்கான வரியை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு வரியை அதிகரிப்பதன் மூலம் 1.6 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டி தெரிவித்துள்ளார்.




கொவிட் தொற்று நிலைமையின் காரணமாக கிருமி நாசினி தயாரிப்பு பாரியளவில் அதிகரித்தது. எனவே இதனை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் எதனோலுக்கான வரி கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி இரு சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டது.

அத்தோடு கள் லீற்றருக்காக அறவிடப்படும் வரியை 25 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஜனவரி முதல் கள் லீற்றருக்கான வரி 25 ரூபாவால் குறைக்கப்பட்டமையால் பெற்றுக் கொள்ளப்பட்ட இலாபத்தின் பயன்கள் நுகர்வோரை சென்றடையவில்லை என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



# சினிமா துளிகள்



## தெலுங்கு சினிமாவில் தடம் பதிக்க தயாராகும் யோகிபாபு?

தமிழ் திரையுலகில் தவிர்க்க முடியாத காமெடி நடிகர் யோகி பாபு. இவர் நடித்த "லவ் டுடே" திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

தமிழ் திரையுலகில் பிரபல நகைச்சுவை நடிகராக இருந்து வருபவர் யோகி பாபு. இவர் நடிப்பில் வெளியான காக்கிச் சட்டை, வேதாளம், ரெமோ, சர்கார், விஸ்வாசம், கூர்கா உள்ளிட்ட படங்களில் அனைவரின் கவனத்தை ஈர்த்தார்.

நடிகர்கள் ரஜினி, விஜய், அஜித், சிவகார்த்திக்கேயன், தனுஷ் என பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ள யோகி பாபு, தற்போது தமிழ் திரையுலகில் தவிர்க்க முடியாத நகைச்சுவை நடிகராக வலம் வருகிறார்.

யோகி பாபு சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான "லவ் டுடே" திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில், இவர் தெலுங்கு படத்தில் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

அதாவது, பிரபல நடிகர் பிரபாஸ் புதிய படம் ஒன்றில் நடித்து வருவதாகவும் இதில் நகைச்சுவை வேடத்தில் யோகிபாபு நடிக்கயிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. யோகிபாபு விரைவில் கதை எழுதி திரைப்படம் எடுக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிளாக் பஸ்டர் ஹிட்டாகி இருக்கும் லவ் டுடே திரைப்படம்




பிரதீப் ரங்கநாதன் நடித்து இயக்கியுள்ள திரைப்படல் லவ் டுடே, கோமாளி திரைப்படத்தை தொடர்ந்து அவரின் இயக்கத்தில் வெளியாகியுள்ள இப்படத்தை அனைவரும் எதிர்பார்த்து இருந்தனர்.

மேலும் இப்படமும் கடந்த வாரம் வெளியாகி மக்களிடையே மாபெரும் வரவேற்பை பெற்று இருக்கிறது. சிறந்த விமர்சனங்கள் பெற்று இப்படம் முதல் நாள் முதலே வசூலை தொடங்கியிருக்கிறது.

அதன்படி நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே போகும் இப்படத்தின் வசூல் தற்போது ரூ. 40 கோடி வரை வசூலித்து விட்டதால சொல்லப்படுகிறது.

இந்நிலையில் லவ் டுடே திரைப்படத்தின் தமிழ்நாடு ஷெர் குறித்த தகவல் வெளியாகியிருக்கிறது. அதன்படி லவ் டுடே திரையரங்க ஷெர் மட்டும் ரூ. 20 கோடியை எட்டி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தல -தளபதியின் புதிய திரைப்படங்களை தட்டி தூக்கிய பிரபல நடிகை !



நடிகர்கள் அஜித் மற்றும் விஜய்யின் திரைப்படங்கள் பல வருடங்களுக்கு பிறகு ஒரே சமயத்தில் வெளியாக இருக்கிறது. அதன்படி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாரிசு மற்றும் துணிவு திரைப்படங்கள் மோத இருக்கின்றன.

இந்நிலையில் இப்படங்களை தொடர்ந்து விஜய் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் அவரின் 67-வது திரைப்படத்தில் நடிக்க இருக்கிறார்.

நடிகர் அஜித் இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் அவரின் 62-வது திரைப்படத்தில் நடிக்க இருக்கிறார்.

இந்நிலையில் அந்த இரண்டு திரைப்படங்களிலும் நடிகை திரிஷா தான் நடிக்க இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆம், தளபதி 67-ல் விஜய்க்கு மனைவியாக திரிஷா நடிக்க போவதாகவும்.

அஜித்தின் 62-வது திரைப்படத்தில் நயன்தாரா இல்லை, திரிஷா தான் கதாநாயகியாக நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிளாமரில் எல்லைமீறும் மீரா ஜாஸ்மின்.. படுமோசமான உடையில் போட்டோஷூட்





## டிஎஸ்பியாக மாறிய விஜய் சேதுபதி..




விஜய் சேதுபதியின் 46-வது படத்தை இயக்குனர் பொன்ராம் இயக்குகிறார். இப்படத்தின் டைட்டில் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. 2010-ல் வெளியான "தென்மேற்கு பருவக்காற்று" படத்தில் கதாநாயகனாக அறிமுகமான விஜய்சேதுபதி தற்போது முன்னணி நடிகராக உயர்ந்துள்ளார்.

பீட்சா, சூது கவ்வும், நானும் ரவுடிதான், சேதுபதி, தர்மதுரை, விக்ரம் வேதா, 96 உள்ளிட்ட படங்கள் அவருக்கு திருப்புமுனையை ஏற்படுத்தின. 46 விஜய் சேதுபதியின் 46-வது திரைப்படத்தை இயக்குனர் பொன்ராம் இயக்குகிறார்.

இந்த படத்தில் விஜய்சேதுபதி போலீஸ் அதிகாரியாக நடிப்பதாக கூறப்படுகிறது. நீண்ட இடைவெளிக்கு பின்னர் விஜய்சேதுபதி மீண்டும் போலீஸ் அதிகாரியாகவும், அவருக்கு ஜோடியாக அனு கீர்த்திவாஸ் நடித்திருக்கிறார்.

அதன்படி இப்படத்திற்கு டிஎஸ்பி என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. விஜய் சேதுபதி பைக்கில் அமர்ந்துக் கொண்டு வருவது போன்று இடம்பெற்றுள்ள அந்த போஸ்டர் இணையத்தில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

## நயன்தாராவை ரிஜெட் செய்த முன்னணி இயக்குனர்

லேடி சூப்பர்ஸ்டார் என ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருபவர் நடிகை நயன்தாரா. இவர் அண்மையில் தான் இரட்டை குழந்தைகள் பிறந்தது. மேலும் தற்போது ஜவான், கனெக்ட், இறைவன், நயன்தாரா 75 ஆகிய படங்களை கைவசம் வைத்துள்ளார்.

நடிகை நயன்தாரா ஐயா படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார். இதன்பின் ரஜினியுடன் சந்திரமுகி, அஜித்துடன் பில்லா என தொடர்ந்து முன்னணி நட்சத்திரங்களுடன் இணைந்து நடித்து முன்னணி நடிகை அந்தஸ்தை பெற்றார்.

இந்நிலையில், நடிகை நயன்தாரா தமிழ் சினிமாவில் நடிக்க வந்த போது அவரை இயக்குனர் பார்த்திபன் தன்னுடைய குடைக்குள் மழை படத்தின் கதாநாயகியாக முதன் முதலில் தேர்த்தெடுத்துள்ளார். நயன்தாராவை கதாநாயகியாக தேர்ந்தெடுத்த மறுநாள் தன்னை சந்திக்க வரும்படி பார்த்திபன் கூறியுள்ளார். ஆனால், சொன்ன நேரத்திற்கு நயன்தாராவால் பார்த்திபனை சந்திக்க முடியாமல் போய்விடுகிறது. இதனால் இப்படத்தில் இருந்து நயன்தாராவை தூக்கி விட்டாராம் பார்த்திபன். இதன்பின் தான் இந்த கதாபாத்திரத்தில் மதுமிதா என்ற நடிகையை நடிக்க வைத்தாராம் பார்த்திபன்.



# இளம் சந்ததியினரை குறி வைக்கும் போதைப் பொருள் பாவனை



1987 ஆம் ஆண்டு ஐ.நா.பொதுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு வருடமும்ஜூன்26ஆம்திகதிபோதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் சுமார் 200 மில்லியன் பேர் போதைப்பொருள் பாவிப்பவர்களாக உள்ளார்கள் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாகிய அளவில் எழுந்திருக்கும் பிரச்சனைதான் இந்த போதைப்பொருட்கள். போதைப் பொருட்களினால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன. 1000 இற்கு 1 என்ற அடிப்படையில் மாணவர்கள் புகைத்தல் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் மூலம் அறியமுடிகின்றது. இலங்கையில் 13-15 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களில் 11 விகிதத்தினர் புகைத்தல் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக உலக சுகாதார திணைக்களம் தெரிவிக்கின்றது.

தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும், குழப்பத்தையும் தன்னைத்தானே மனிதன் ஏற்படுத்திக் கொள்கின்றான். போதைப் பொருட்களில் மது, ஹெராயின், பெத்தனால் ஊசி, கஞ்சா, புகையிலை, பான் மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் இன்னும் பல வகைகள் அடங்கும். உலக சனத்தொகையில் சுமார் நூறு கோடிபேர் புகைப்பழக்கத்திற்கு பழக்கபட்டுள்ளனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 30 விகித மக்களும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 50 விகித மக்களும் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர். தினமும் சுமார் 250 மில்லியன் பெண்கள் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர். (அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 22விகிதம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 0.9 விகிதம்).

பள்ளிப் பருவத்திலோ அல்லது கல்லூரிகளிலோ படிக்கும் போது தீய நண்பர்களோடு ஏற்பட்ட பழக்கங்களினாலும் மற்றும் பொழுதுபோக்காகவும் பழகியக் கொண்ட பழக்கத்தை இன்று வரை விட்டு மீளமுடியவில்லை என வருத்தப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். பலமுறை இத் தீய பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என முயற்சி எடுத்து தோற்றுப் போனவர்களும் இருக்கிறார்கள். ஒன்றைத் தவிர்க்க மற்றொன்றை பயன்படுத்தி அதையும் சேர்த்து அடிமையாகிக் கொண்டவர்களும் இருக்கின்றனர். கடின வேலை செய்பவர்கள் தாங்கள் உடல் வலி மறந்து இருக்கவும் போதையைப் பயன்படுத்துகிறோம் என்று கூறுகிறார்கள். நிச்சயம் ஒரு நாள் மரணம் உண்டு, இதை விட்டு ஒழித்தால் மட்டும் மரணமின்றி வாழ்ந்துவிடலாமா? என தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டு தொடர்பவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டுவிடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிடுகின்றது.

எல்லோருக்கும் எளிமையாகவும், பரவலாகவும் கிடைத்துவிடும் போதைப்பொருள்தான் சாராயம் மற்றும் அதைச் சார்ந்த மது வகைகள். இந்தப் பழக்கம் தற்போது பள்ளிப் பருவத்திலேயே பலரும் பழகிக் கொண்டிருப்பதை கண்கூடாகக் காணமுடிகின்றது. இதற்குக் காரணம் ஆங்காங்கே அமைந்திருக்கும் மதுக்கடைகளும், இதற்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரமும், திரைப்படங்கள் இத்தகைய பழக்கம் இளைஞர்கள் செய்வது தவறில்லை என்று சித்தரிப்பதும், மகிழ்ச்சி மற்றும் துக்க வேளைகளில் மது தேவை என்ற மனோநிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. மது பரிமாறல்கள் மேலை நாட்டுக் கலாச்சாரம் என உயர்வாகக் கருதுவதும் இப்பழக்கத்திற்கு ஒரு காரணமாகும். பிரச்சனைகள் மற்றும் குறைகளை போதைப்பழக்கத்தால் மறந்து நிம்மதியாக இருக்கலாம் என்று தவறாகக் கருதுவதும் இது போன்ற தீய பழக்கங்களுக்கு மக்களை ஆட்படுத்திவிடுகின்றது. தன்னைச் சுற்றியுள்ளவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தால் அவரைத் திருத்த முயற்சிக்காமல் அவர்களிடமிருந்து சிறிது சிறிதாக தாங்களும் கற்றுக் கொள்கின்ற பலரும் இருக்கிறார்கள்.

இளம் வயதில் பழகிக் கொள்ளும் இத்தகைய போதைப் பழக்கங்கள் மெல்ல மெல்ல இவர்களை அடிமையாக்கி விடுகிறது. போதைப் பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது மனிதனின் நரம்பு மண்டலம். மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலை குறைக்கச் செய்கின்றது. இதன் காரணமாக சீரான இதயத்துடிப்பு பாதிக்கப்படுட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களினால் இதை உட்கொண்டவர்கள் மனதளவில் தன்னம்பிக்கை இழக்கிறார்கள். உடல் சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்கு உள்ளாகின்றார்கள். போதைப் பொருட்களினால் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்புகள், சமுதாயம் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் பாதிப்புகள் என பலவகையானதீமைகளைஅடுக்கிக்கொண்டே செல்லலாம்.

உலக நாடுகள் எல்லாம் போதைப் பொருட்கள் கடத்தலுக்கு எதிராக கடுமையான சட்டம் கொண்டு கட்டுப்படுத்தி வருகின்றன. இருப்பினும் ஹெராயின், கஞ்சா போன்ற பொருட்களை விற்பதும் பிற நாடுகளுக்கு கடத்துவதும் இன்றுவரையிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. பாடசாலை வாசல்களிலேயே கஞ்சா சாக்லேட்கள் விற்கப்படுவதும், விற்பவர்கள் கைது செய்யப்படுவதும் பத்திரிக்கைகளில் படிக்க நேரிடுகின்றது. சுற்றுலாத்தலங்கள் அருகாமையில் சிதறிக்கிடக்கும் மதுக் குப்பிகளும், ஊசிகளும் பலரும் போதைக்கு அடிமையாகிக் கொண்டிருப்பதற்குச் சான்று பகர்கின்றது.

உலக மருத்துவ அறிக்கையின் புள்ளிவிவரப்படி உலகில் 2 கோடி பேர் ஹெராயின் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் ஆவார்கள். அதிர்ச்சித் தகவல் என்னவென்றால் தற்போது மேற்கத்திய நாடுகளில் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை சதவிகிதத்தின் அடிப்படையில் குறையத் தொடங்கியுள்ளது. ஆனால் ஆசிய நாடுகளில் போதைப்பொருள் அடிமைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் மேலை நாடுகளில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுகள் நம் நாடுகளில் இல்லாமல் போனதுமாகும். பாடசாலை மாணவர்கள் தலைநகரில் போதைப்பொருட்கள் பாவிப்பது இன்று வேகமாகப் பரவி வருகின்றது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பற்றி உரிய கவனம் எடுக்காதபட்சத்தில் இனி வருங்காலம் அதாள பாதாளத்திற்குள் சென்று விடும். போதைப்பொருள் பாவனையாளர்களின் தொல்லைகளால் பாதிக்கப்பட்ட சிலரிடம் கருத்துக்கேட்ட போது "போதை பொருளை பாவிப்பவர்களினால் எங்களுடைய பிள்ளைகளும் இந்த பழக்கத்திற்கு உள்ளாகுபவர்களாக மாற வாய்ப்பு இருக்கின்றது.

போதைக்கு எதிராக பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளன.. நம் உடல் ஆரோக்கியத்திற்கு நாமே தீங்கிழைத்துக் கொள்வது பாவமான செயலாகும். நாம் செய்ய வேண்டியது இது போன்ற போதைப் பழக்கங்களிலிருந்து விலகி இருப்பது மற்றும் இது குறித்த விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் ஆகும்.போதை என்பது தனிமனிதனை மட்டும் பாதிக்கும் பழக்கம் என எண்ணிவிட இயலாது.

இதனால் அவரைச் சுற்றியுள்ள சமுதாயமும் பாதிப்படைகின்றது. படிக்கும் வயதில் போதையைப் பயன்படுத்தினால் தம்முடைய படிப்பும் கெட்டு, தன்னோடு பழகும் சக நண்பர்களின் படிப்பையும் பாழ்படுத்திவிடுவது. பணிபுரிபவர்கள் போதைக்கு அடிமையானால் அலுவலக வேலையை இழந்து, தம்முடைய பொருளாதாரத்தை இழந்து குடும்பத்தை வறுமையில் கொண்டு சென்றுவிடுதல், குடும்ப மகிழ்ச்சி மற்றும் சமூக அந்தஸ்தை இழத்தல். வாகனம் ஓட்டுபவர்கள் போதையைப் பயன்படுத்துவதால் கவனம் சிதைந்து விபத்துக்களுக்கு உள்ளாகி உயிர் இழப்புகளை ஏற்படுத்துவது. சிறிது சிறிதாக போதைப்பழக்கமானது அதிகரித்து அந்த அற்ப இன்பத்தைப் பெற்றுக்கொள்ள திருடுதல், பொய் பேசுதல் மற்றும் மானக்கேடான விஷயமாக இருந்தாலும் அதைச் செய்யத் துணிந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது. போதையின் கோரப்பிடியில் அகப்பட்டவர்கள் அஞ்சாமல் பாலியல் குற்றங்களிலும் ஈடுபட்டு அதன் மூலம் பல நோய்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

**"போதைக்கு அடிமை" என்பதை கீழ்கண்ட விஷயங்களால் அறிந்து கொள்ளலாம்.**

ஆரம்பத்தில் பயன்படுத்திய அளவைவிட சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டே செல்லுதல். மற்றும் அடிக்கடி போதை வேண்டுமென்று தோன்றுதல்.

எதை இழந்தாலும் தனக்கு போதை தரக் கூடிய பொருளை அந்தந்த நேரத்தில் தனக்குக் கிடைக்கும் விதமாக பார்த்துக் கொள்ளுதல். அல்லது அதை முன்னரே வாங்கி வைத்துக் கொள்ளுதல்.

இப்பழக்கத்தை இன்றோடு விட்டுவிட வேண்டும் என்று சபதம் ஏற்றும் பல முறை தோல்வியடைவது.

தனக்கு போதை தரக்கூடிய பொருளை அடைய கேவலமான செயல்களைக் கூட செய்யத் துணிவது.

நன்றாக படிக்கக்கூடிய பதினைந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளின் மதிப்பெண்கள் திடீரென குறையத் தொடங்குகின்றது எனில் அவர்களின் நண்பர்கள் வட்டாரத்தைக் கவனியுங்கள்.

உடல் நிலையில் ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

செயல்பாடுகளிலோ அல்லது உரையாடல்களிலோ ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்பதை கவனியுங்கள்.

அவர்களுடைய தனிமை அறையில் யாரும் நுழைவதைத் தடுக்கிறார்களா?

அடிக்கடி பணம் கேட்கிறார்களா? உண்மையான தேவைதானா என்பதை கண்டறியுங்கள்.

போதைக்கு அடிமையானவர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்க எத்தனையோ மறுவாழ்வு மையங்கள், அலோபதி, ஆயுர்வேதா, சித்தா என எத்தனையோ மருத்துவ முறைகளும் இருக்கின்றன. எனினும் தானாகவே உணர்ந்து யார் கைவிடுகின்றாரோ அவர்களால் மட்டும் தான் இத்தகைய பழக்கங்களிலிருந்து மீள்வது சாத்திமாகும்.

இவைகள் பற்றி விளக்கம் வழங்கத்தக்க வகையில் 1988இல் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருளுக்கெதிரான உலக மகாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் புகைத்தல், போதைப்பொருட் பாவனையின் காரணமாக நாளொன்றிற்கு 100 பேர் மரணிப்பதாக இலங்கை மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் 2015 ஆம் ஆண்டு அறிக்கை விடுத்துள்ளது. (புகைத்தலினால் 60 பேர் மதுவினால் 40 பேர்) அறிக்கையின் பிரகாரம் புகைத்தலில் புதிதாக ஈடுபடுவதற்காக ஒரு நாளில் 80 சிறுவர்கள் முயற்சிப்பதாகவும் அறியமுடிகிறது. இந்தியாவில் சுமார் 11 கோடி மக்கள் போதைப் பொருள் பாவனையில் சிக்கிதவிப்பதாகவும் அறியப்பட்டுள்ளது!

இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகள் நவீன போதைப் பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. இலங்கையில் போதை பொருட்கள் 1980களில் பரவ ஆரம்பித்தது. இலங்கையில் ஹெரோயின் விற்பனையாளர் முதன் முதலில் 1981 மே 26 இல் 70 கிராம் ஹெரோயினுடன் பேருவளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் 2015ஆம் ஆண்டை போதைப்பொருள்கள் அற்ற ஆண்டாக மாற்றியமைக்க வேண்டும் என்று பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு போதைக்கு முற்றுப்புள்ளி திட்டம் மட்டுமே போதுமானதல்ல, சகலரும் பூரண ஒத்துழைப்பின் மூலமே போதைப் பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். போதைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுப்பது. புதிதாக அப்பாவனைக்கு அடிமைப்படாமல் இளம் சந்ததியினரைப் பாதுகாப்பது என்ற இலக்கிலேயே அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

11ஆம் பக்கம் பார்க்க...
தொகுப்பு

10ஆம் பக்க தொடர்ச்சி...

அதே நேரம் இன்று இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பொறுத்தவரை இந்நடவடிக்கைக்கு அவை போதியதாக இல்லை. உதாரணமாக ஒரு ஏக்கர் கஞ்சாவைப் பயிரிட்டாலும் 10 ஏக்கர் கஞ்சாவைப் பயிரிட்டாலும் அதற்கான தண்டனை ஒரே விதமாகவே தற்போதுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் ஹெரோயின் ஒரு கிலோ மூன்று மில்லியன் ரூபா பெறுமதியானது. ஹெரோயினைப் பொறுத்தவரை 2 கிராமை சுமார் 500 பேர் பாவித்து போதை ஏற்றிக்கொள்ள முடியும். வெளிநாடுகளில் வருடாந்தம் இலட்சக் கணக்கானோர் இதனால் பாதிக்கப்பட்டு தண்டனைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். இது இவ்வாறிருக்கையில் இன்று வர்த்தக ரீதியில் போதைப்பொருட்கள் சந்தைப் படுத்தப்படுகின்றன. அநேகமாக சட்ட விரோதமான கடத்தல் போன்ற வழிகளிலேயே இவ் வர்த்தகம் நடைபெறுகின்றது. மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் இத்தகைய நடவடிக்ககைகள் மேற்கொள்ளப்படுவதாலும் இதற்கு உடந்தையாக வருமானத்தை பெற்று கொள்ளும் நோக்கில் சில பெரும்புள்ளிகள் இருப்பதினாலும் இதனை இல்லாதொழிப்பது ஒரு கடினமான செயற்பாடாகவே மாறி வருகின்றது. போதைபொருள் பாவனையால் ஏற்படும் தீங்குகளும் பாதிப்புகளும் அழிவுகளும் குறித்து மக்களிடையே வழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜ°ன் 26 ஆம் திகதி சர்வதேச போதைபொருள் ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும் சமூகத்தின் மத்தியில் ஏட்டுச் சுரைக்காயாகவே இது பற்றிய விடயம் காணப்படுகின்றது.

போதை ஒழிப்பை மேற்கொள்ள ஒவ்வொருபவரும் ஒத்துழைக்க வேண்டும். மேலும் போதை பொருள் ஒழிப்புக்கு பல சட்டங்கள் மட்டும் இருந்தால் போதுமானது அல்ல சகலரின் ஒத்துழைப்பும் அவசியம். இதன் மூலமே போதை பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். போதைக்கு அடிபணிபவர்களை அதிலிருந்து மீட்பதற்கும் இளச் சந்ததினரை அதிலிருந்து பாதுகாப்பதற்கும் அரசு பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்ற போதிலும் பல சமூக நாச சக்திகளா சமூகத்தின் மத்தியில் பல சீர்கேடுகள் இன்னமும் நிகழ்கின்றன.

போதைபொருள் பாவனை, கடத்தல், விற்பனை செய்தல் போன்ற போதைபொருள் பாவனையாளர்களால் ஏற்பட்டுள்ள சமூக பிரச்சினை என்பன இன்று நாட்டில் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. போதைபொருளை கட்டுப்படுத்த ஒவ்வொரு நாட்டு அரசாங்கங்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. போதைபொருள் கடத்தலுக்காக சில நாடுகள் மரணதண்டனையை கூட சட்டமாக பிரயோகித்து வருகின்றன.


இவ்வாறான நடவடிக்கை மேற்கொண்டு வந்துள்ள போதும் போதைப்பொருள் பாவனையானது சமூகத்தின் மத்தியில் குறைந்து விடவில்லை. போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் இலங்கையை பொறுத்த வரையில் குறைவாகவே காணப்படுகின்றது. போதை பொருளை பாவிப்பதனால் பாவிப்பவர்கள் பல்வேறு கஸ்டங்களுக்கு உள்ளாவதோடு பிறருக்கும் தீங்கு விளைவிப்பவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

போதைப்பொருளானது பயன்படுத்துபவரை மட்டுமின்றி, குடும்பம் மற்றும் சமுதாயத்தையும் இது பாதிக்கிறது. இதுதான் அனைத்து நோய்களுக்கும் முன்னோடியாக இருக்கின்றது. சிலர் இதற்கு அடிமையாக மாறி விடுகின்றனர். எதிர்கால சந்ததியை சீரழிக்கும் சக்தி வாய்ந்த அரக்கன்களாக போதை மருந்துகள் உள்ளன. கஞ்சா, அபின், புகையிலை, மது, கொகைன், பிரவுன் சுகர், ஹெரோயின்,ஊக்க மருந்து, ஒயிட்னர் முதலிய போதை வஸ்த்துப்பாவனை இளைஞர்களிடம் வேகமாக பரவும் பழக்கங்களாக மாறி வருகின்றன. உடலை மட்டுமின்றி, மனதையும் சிதைத்து, குடும்பத்தையும் அழித்து, முடிவில் மரணத்துக்கே அழைத்து செல்லும் சமுதாய அரக்கன்களாக இந்தப் போதைப் பொருட்கள் மாறியுள்ளன.

சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள், ஏழைகள், பணக்காரர்கள், விளையாட்டு வீரர்கள், இரசிகர்கள் என்று அனைவராலுமே போதைப் பொருள் பாவிக்கப்படுகின்றது. அவரவர் வசதிக்கும் தரத்திற்கும் ஏற்றவாறு மாறுகின்றதே தவிர குறைந்தபாடில்லை. ஒரு தேசத்தை அல்லது ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தனி நபரை திட்மிட்டு நசுக்கிவிட ஏவப்படுகின்ற ஓர் ஆயுதம் என்கின்ற குற்றச்சாட்டுகளும் நிலவுகின்றன. தினமும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறன. நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தியும் கடத்தல் நடக்கிறது.

ஆகவே, போதைக்கு அடிமையானவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி, மறுவாழ்வு அளிக்க வேண்டும். விற்பனையை தடை செய்தால் மட்டுமே இதனைத் தடுக்க முடியும். ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் நற்சிந்தனைகளை ஏற்படுத்துவற்காக உண்மையான ஆத்மீக சிந்தனைகளை மனித மனங்களில் பதிய வைத்து சீர்திருத்தங்களைச் செய்வதே ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான தீர்வாக அமையும்.

## நகைச்சுவை துணுக்குகள்



அப்பா: "ரேங் கார்ட் எங்கடா?"

மகன்: "இந்தாங்கப்பா ரேங் கார்ட்"

அப்பா: "அடப்பாவி, அஞ்சு சப்ஜெக்ட்லேயுமா ஃ பெயில்? இனிமே என்னை அப்பானு கூப்பிடாதடா"

மகன்: "சரிடா மச்சான், கையெழுத்து போடு"

"பையனுக்கு என்ன சார் பேர் வெச்சிருக்கீங்க?"
"லோராண்டி ன்னு வச்சிருக்கோம்"
"என்னய்யா பேர் இது. கேள்விப்பட்டதே இல்லையே"
"என்ன இப்படி சொல்லிட்டீங்க. சித்தர் பாடல்கள்ளே இடம் பெற்ற பேர் சார் இது"
"அது என்ன பாடல்?"
"நந்தவனத்தி லோராண்டி"

மாணவன் சார், டீ மாஸ்டர்டீ போடறாரு,
பரோட்டா மாஸ்டர் பரோட்டா போடறாரு,
மேக்ஸ் மாஸ்டர்மேக்ஸ் போடறாரு,
நீங்க ஹெட்மாஸ்டர் தானே
ஏன் மண்டைய போட மாட்டேங்கிறீங்க?

கணவன்: சினிமாவுக்கு போக டிக்கெட் வாங்கிட்டு வந்திருக்கிறேன்!

மனைவி: சரிங்க, நான் போய் டிரஸ் பண்ணிட்டு வந்துடறேன்! கொஞ்சம் லேட் ஆயிடிச்சின்னா என்னங்க பண்றது..

கணவன்: ஒண்ணும் பிரச்சினை இல்ல டிக்கெட் நாளைக்குத்தான் வாங்கி வந்திருக்கிறேன்!

"தினமும் உன் மனைவிக்கு பூ வாங்கிட்டுப் போறியே.. அவ்வளவு பாசமா மனைவி மேல?"

"மாப்ளே! பாசம் மனைவி மேலே இல்லடா... பூக்காரி மேல!"


என் பையன் பண்ண காரியத்துனால என்னால வெளியே தலை காட்ட முடியலை.."

"அப்படி என்ன பண்ணிட்டான்..?"

"என்னோட விக்கை எடுத்து அவன் போட்டுக்கிட்டுப் போய்ட்டான்."

# ஆபிரகாம் லிங்கனின் பொன்மொழிகள்

நாங்கள் ரோஜாச் செடிகளில் முட்கள் இருக்கிறது என்று குறை சொல்லிக்கொண்டிருக்கலாம், அல்லது முட்செடிகளில் ரோஜாக்கள் இருக்கிறது என்று மகிழ்ச்சியடையலாம்.



எதிர்காலத்தைக் கணிப்பதற்கான மிகவும் நம்பகமான வழி அதை உருவாக்குவது தான்.

கிட்டத்தட்ட எல்லா மனிதர்களாலும் துன்பத்தைத் தாங்க முடியும், ஆனால் நீங்கள் ஒரு மனிதனின் குணத்தை மதிப்பிட விரும்பினால், அவனுக்கு அதிகாரத்தைக் கொடுங்கள்.

கடவுள் நம் பக்கம் இருக்கிறாரா என்று எனக்கு அக்கறை இல்லை, கடவுளின் பக்கத்தில் நான் இருக்க வேண்டும் என்பதே எனது மிகப்பெரிய அக்கறை, ஏனென்றால் கடவுள் எப்போதும் சரியானவர்.

சட்டப்பூர்வமாக சரியான சில விஷயங்கள் ஒழுக்க ரீதியாக சரியானவை அல்ல என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

எதிர்ப்பது உங்கள் கடமையாக இருக்கும்போது அமைதியாக இருப்பது பாவச்செயலாகும்.

பணக்காரர்களை அழிப்பதன் மூலம் நீங்கள் ஏழைகளுக்கு உதவ முடியாது. கூலி கொடுப்பவரை கீழே இழுப்பதன் மூலம் நீங்கள் கூலி பெறுபவரை மேலே உயர்த்த முடியாது.

மேகத்தின் பின்னால் இருந்தாலும், சூரியன் இன்னும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

எதிரியை அழிக்க சிறந்த வழி அவரை நண்பராக்குவது தான்.

காத்திருப்பவர்களுக்கும் சில விடயங்கள் கிடைக்கக்கூடும், ஆனால் விரைந்து செல்வோர் விட்டுச்செல்லும் விடயங்கள் மட்டுமே.


ஒரு மனிதனின் மேன்மையை எது அவனைக் கோபப்படுத்துகிறது என்பதை வைத்துக் கூற முடியும்.

மற்றவர்களுக்கு சுதந்திரத்தை மறுப்பவர்கள், அவர்களும் அதைப் பெற தகுதியற்றவர்கள்.

நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால், எப்போதாவது ஏமாற்றமடைவீர்கள், ஆனால் நீங்கள் அவநம்பிக்கையுடன் இருந்தால், எப்போதும் பரிதாபமான நிலையில் இருப்பீர்கள்.



# பல்சுவை கதம்பம்



## வாழைப்பழம் சாப்பிட்டால் கிடைக்கும் நன்மைகள்

வாழைப்பழத்தில் அதிகளவு நார்சத்து இருப்பதால் இதனை உண்டதும் உங்களுக்கு நிறைவான உணர்வு ஏற்படும். அதிலும் பழுக்காத வாழைப்பழங்களில் நோயெதிர்ப்பு தன்மை அதிகமுள்ளது.

வாழைப்பழத்தில் பொட்டாசியம், கல்சியம், மாங்கனீசு, மெக்னீசியம், இரும்பு, போலேட், நியாசின், ரிபோஃபிளேவின் மற்றும் பி6 போன்ற வைட்டமின்களும், தாதுக்களும், அதிகளவு ஊட்டச்சத்துக்களும் நிரம்பியுள்ளது. இவை உடல் செயல்பாட்டிற்கு போதுமான ஆற்றலை தருகிறது.

வாழைப்பழத்தில் ஏராளமான ஆன்டி ஆக்சிடண்டுகள் நிரம்பியுள்ளது. இதனை சாப்பிடுவதால் இதய சம்மந்தப்பட்ட நோய்கள் மற்றும் பல்வேறு விதமான நோய்கள் உருவாவது தடுக்கப்படுகிறது.

உயர் ரத்த அழுத்த பிரச்சனையை குறைப்பதில் வாழைப்பழம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. வாழைப்பழத்தில் குறிஅவன உப்புக்களும், அதிகளவு பொட்டாசிய சத்தும் நிறைந்துள்ளது.

வாழைப்பழத்தில் பொட்டாசிய சத்து அதிகமாக இருப்பதால் , இதனை சாப்பிடுபவர்களுக்கு சிறுநீரகம் தொடர்பான நோய்கள் வராது.

## அழகு குறிப்புகள்

கற்றாழை ஜெல்லைக் கொண்டு தினமும் முகத்தை மசாஜ் செய்து ஊற வைத்து கழுவி வந்தால் முகத்தில் வரும் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள் நீங்கி முகம் அழகாகவும் வெள்ளையாக மாறுவதை காணலாம்.

கசகசாவை பாலில் சேர்த்து 15 நிமிடத்திற்கு ஊறவைக்கவும். பின் அதை மிக்சியில் சேர்த்து மைய அரைத்து அதை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவினால் முகம் அழகான தோற்றத்தை பெறுவதுடன் கரும்புள்ளிகள் மறைந்து முகம் பளிச்சிடும்.

இரவில் படுக்கும் போது சூரியகாந்தி விதையை பாலில் ஊற வைத்து, மறுநாள் காலையில் அதில் சிறிது குங்குமப்பூ மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து கலந்து அரைத்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து பின் கழுவ வேண்டும்.

சிலரது முகம் எப்போதும் எண்ணெய் வடிந்தது போல் பொலிவு இல்லாமல் இருக்கும். அவ்வாறு இருப்பவர்கள் கனிந்த தக்காளிப் பழத்தை தோல் நீக்கி அதனை நன்கு அரைத்துக் கொள்ளவும். அதில் சிறிதளவு பால் கலந்து பேஸ்ட் போல செய்து முகத்திற்கு பூசவும். இதனால் முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்குவதோடு முகம் பளிச்சென்று மாறிவிடும்.

தேனில் சிறிது எலுமிச்சை சாறு மற்றும் தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகம் ஆரோக்கியமாகவும், பளிச்சென்றும் காணப்படும்

## பொடுகு பிரச்சினைக்கான தீர்வு!

அரை கப் கற்றாழை ஜெல்லுடன் 2 ஸ்பூன் எலுமிச்சை சாறு கலந்து உச்சந்தலையில் தடவி அரை மணி நேரம் கழித்து மிதமாக சூட்டில் குளிக்கலாம். வாரத்திற்கு ஒருமுறை தடவி குளித்து வந்தால் நல்ல மாற்றம் கிடைக்கும். பொடுகு நீங்குவதோடு உச்சந்தலை அரிப்பும் நீங்கும்.

ஒரு கப் கற்றாழையுடன் ஒரு டீ ஸ்பூன் தேன் கலந்து இரண்டு டீ ஸ்பூன் ஆப்பிள் சீடர் வினிகருடன் நன்றாக கலக்கவும். இதை உச்சந்தலையில் தேய்த்து 20 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் மைல்டான ஷாம்பு சேர்த்து சுத்தம் செய்யவும்.

இரண்டு டீஸ்பூன் கற்றாழையுடன் ஒரு டீ ஸ்பூன் ஆலிவ் எண்ணெய் மற்றும் ஒரு கப் தயிர் சேர்த்து நன்றாக கலந்துக் கொள்ளுங்கள். இதை கூந்தலின் வேர் முதல் நுனி வரை தேய்த்து அரை மணி நேரம் ஊறவைத்து மிதமான சூட்டில் தண்ணீரில் கழுவ வேண்டும். இதை வாரத்திற்கு ஒருமுறை செய்து வர நல்ல பலனை கொடுக்கும்.

## பாகற்காய் குழம்பு வைப்பது எப்படி?

ஒரு கடாயில் நான்கிலிருந்து ஐந்து டேபிள்ஸ்பூன் அளவு நல்லெண்ணெய் ஊற்றி, பாகற் காயை வட்ட வடிவில் வெட்டி அந்த எண்ணெயில் போட்டு 1/2 ஸ்பூன் உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து, பொன்நிறம் வரும் அளவிற்கு வறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். மிதமான தீயில் மூன்றிலிருந்து நான்கு நிமிடங்கள் வறுத்து எடுத்தால் போதுமானது. வறுத்த அந்த பாகற்காயை எண்ணையிலிருந்து வடித்து, எடுத்து தனியாக ஒரு தட்டில் வைத்துக் கொள்ளுங்கள்.

இரண்டு தக்காளியை மிக்ஸியில் போட்டு விழுதாக அரைத்து வைத்துக் கொள்ளவும். சிறிய எலுமிச்சை அளவு புளியை தண்ணீரில் ஊறவைத்து புளி கரைசலை தயார் செய்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அடுத்ததாக கடாயில் இருக்கும் மீதமுள்ள அந்த எண்ணெயில் கடுகு அல்லது வெங்காய வடகம் தாளித்து கொள்ளுங்கள். அதன்பின்பு வெந்தயம் - 1/2 ஸ்பூன், சீரகம் - 1/2 ஸ்பூன், கறிவேப்பிலை - ஒரு கொத்து, பெருங்காயம் - 1/4 ஸ்பூன், பொடியாக நறுக்கிய பூண்டு பல் - 6, பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயம் - 10 பல், இவைகளை ஒன்றாக சேர்த்து நன்றாக வதக்கி விட வேண்டும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும், அரைத்து வைத்திருக்கும் தக்காளி விழுதை சேர்த்துக் கொள்ளுங்கள். இப்போது தக்காளியின் பச்சை வாடை போகும் அளவிற்கு வெங்காய விழுதோடு சேர்த்து, தக்காளி விழுதையும் வதக்கி விட வேண்டும். ஒன்றிலிருந்து இரண்டு நிமிடங்கள் வதக்கி விட்டால் போதும். அதற்கு அடுத்த படியாக மிளகாய்த்தூள் - ஒரு ஸ்பூன், தனியாத்தூள் - ஒரு ஸ்பூன், மஞ்சள் தூள் - 1/4 ஸ்பூன், உங்களுடைய வீட்டில் மசாலாப் பொருட்கள் சேர்த்து அரைத்து வைத்திருக்கும் குழம்பு மிளகாய் தூள் இருந்தால் அதிலிருந்து இரண்டு ஸ்பூன் சேர்த்துக்கொள்ளலாம். குழம்பு மிளகாய்த்தூள் இல்லை என்றால், மிளகாய் தூள் தனியா தூள் காரத்திற்கு ஏற்றவாறு அதிகமாக சேர்த்துக் கொள்ளலாம். மசாலாப் பொருட்களை சேர்த்து ஒரு நிமிடம் வரை வதக்கிய பின்பு, கரைத்து வைத்திருக்கும் புளிக்கரைசலை சேர்த்து மிதமான தீயில் 5 நிமிடங்கள் வரை கொதிக்க வைக்க வேண்டும். புளி கரைசலை ஊற்றி உடனேயே தேவையான அளவு உப்பு சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஐந்து நிமிடம் கொதித்த அந்தக் குழம்பில் வறுத்து வைத்திருக்கும் பாகர் காய்களை சேர்த்து ஒரு முறை கலக்கி விட்டு, மூடி போட்டு மீண்டும் ஐந்து நிமிடங்கள் மிதமான தீயில் கொதிக்க விட வேண்டும். இருதியாக குழம்பை இறக்குவதற்கு முன்பு அரைஸ்பூன் மிளகுத்தூளை தூவி, கிளறிவிட்டு இறக்கினால் கமகம பாகற்காய் குழம்பு தயார்.

**பின் குறிப்பு: நாம் பாகற்காயை எண்ணெயில் போட்டு உப்பு சேர்த்து வறுக்கும் போது, அதனுடைய கசப்புத்தன்மை குறைந்திருக்கும். உப்பு புளி காரம் அளவைக் கொஞ்சம் தூக்கலாக சேர்த்துக் கொண்டீர்கள் என்றால், கசப்பின் தன்மை குறைவாக தெரியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் தக்காளியை பொடியாக நறுக்கிப் போட்டும் வதக்கிக் கொள்ளலாம். அது உங்களுடைய இஷ்டம்தான். அப்படி ஒரு தக்காளியை வெங்காயத்தோடு போட்டு வதக்கினாலும், ஒரு தக்காளியை நீங்கள் கரைத்து வைத்திருக்கும் புளிக்கரைசலோடு சேர்த்து, உங்களது கையாலேயே கரைத்துவிட்டு, குழம்பு வைத்து பாருங்கள். குழம்பின் ருசி அதிகமாக இருக்கும். எந்த வகையான கார குழம்பு வைத்தாலும், தக்காளியை, புளிகரைசலோடு, சேர்த்து கரைத்து வைப்பது அதிக சுவையை தரும். உங்களுக்கு இந்த குறிப்பு பிடித்து இருந்தால், உங்களுடைய வீட்டிலும் இந்த குறிப்பை முயற்சி செய்து பாருங்கள்.**



அனைத்து
உணர்வுகளையும்
வெளிப்படுத்தும் மொழியாக
கவிதையிருக்க என்
கவிதையை வெளிப்படுத்தும்
மொழியாகவே நீ
இருக்கிறாய்!!!



உன்
புன்னகை
சிந்தும் இதழ்களில்
விழுந்தேனடி நான்
நீ சிந்தும் புன்னகையை
அள்ளிக்கொள்ளவா
உன் ஒற்றை பார்வையில்
உன் விழியில் வீழ்ந்தேனடி
விழிகள் இரண்டையும்
திருடிக்கொள்ளவா...?



04ஆம் பக்க தொடர்ச்சி...

பகிரங்க நடவடிக்கைகள் மேற்கொள்வது சிரமமென்பதால், சுவரொட்டிகள் அடித்து சாத்தியமான இடங்களில் ஒட்டுவோம் என ராஜனிடம் தெரிவித்தார் பொட்டு.

### முதல் சுவரொட்டி

திலீபன் காலத்தில் அரசியற் பணிகளை மேற்கொண்டவர் என்ற வகையில் நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் பற்றி ராஜனின் அபிப்பிராயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன. "உங்கள் சுவடுகளில் தொடரும் பாதங்கள்" என்றொரு வசனத்தை (சுலோகம் என்றும் சொல்லலாம்) எழுதிக் கொண்டுபோய் பொட்டுவிடம் காட்டப்பட்டது. அவர் அதை ஏற்றுக் கொண்டார். எனினும் மக்கள் மனதில் இன்னும் ஆழமாகப் பதிய வைப்பது எப்படி என்று சிந்தித்தவாறே தொடர்ந்து செயலில் இறங்கினார்.

எங்கேயாவது கறுப்பு வர்ணம் (பெயின்ற்) எடுத்து வரும்படி சொன்னார். வெளியே சென்றவர்கள் ஒரு வாளியில் அதனைக் கொண்டு வந்தனர். வெள்ளைத் தாள் ஒன்றை எடுத்த பொட்டு அருகில் நின்ற சூட்டை அழைத்து அவரது காலின் அடிப்பாதத்தில் பெயின்றை அடித்து அத்தாளில் பதிய வைத்தார். அச்சொட்டாக கால் பதிந்தது. எனினும் அங்கு நின்ற அன்னையொருவர் இவரது கால் சிறியதாக உள்ளது வேறொருவரின் கால் பெரிதாக இருக்குமாயின் நன்றாக இருக்கும் எனத் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார். அது சரியாகவே இருந்தது பொட்டுவுக்கு. உடனே அருகில் நின்ற ஜக்சனின் காலில் மை பூசப்பட்டது. அது மிகப் பொருத்தமாக இருந்தது. ராஜன் எழுதிய வசனத்தில் பாதங்கள் என்ற சொல்லை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக .... (டொட் டொட்) என குறிப்பிட்டார் பொட்டு.அந்த வகையில் தயாரிக்கப்பட்ட சுவரொட்டியே முதன் முதலில் மாவீரர் நாளுக்கென மக்களின் பார்வைக்கு வந்தது. துவிச்சக்கரவண்டி மூலமாக பல்வேறு இடங்களுக்கும் கொண்டு சென்று ஒட்டினர் புலிகள்.

### ஒதுங்கிய இராணுவம்

புத்தூர் முகாமிலிருந்து புறப்பட்ட இந்திய இராணுவத்தினரை நாடகக் கலைஞர் செல்வம் மற்றும் பாலன் முதலானோர் வழி மறித்தனர். மாவீரர் நாள் தொடர்பான விடயங்கள் இருப்பதால் வெளியே வராமலிருக்குமாறு அவர்கள் இராணுவத்திடம் கூறினர். தாங்கள் எப்படியும் வெளியேற வேண்டியவர்கள் தானே என்ற நினைப்பிலோ என்னவோ மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து திரும்பிச் சென்றனர் இந்தியப் படையினர். புலிகளின் கட்டளைப் பணியகமான மணலாறு' 14: முகாமில் தேவர் அண்ணாவோடு இணைந்து ஏற்பாடுகளை கவனிக்குமாறு தலைவர் அறிவுறுத்தியிருந்தார். அந்த வகையில் பெண் போராளிகள் உட்பட அனைவரும் உணர்வுபூர்வமாக பணிகளில் ஈடுபட்டனர். புலிகளைத் தவிர வேறு எந்த விடுதலை இயக்கமும் காட்டுக்குள் இருந்து ஒலிபெருக்கி மூலம் பாடல்களை இசைக்க விட்டு தமது தோழர்களை நினைவுகூர்ந்திருக்காது.

இந்நிகழ்வுகள் நடைபெறும்போதும் இந்தியப் படை வந்தால் எதிர்கொள்வதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில் தளர்ச்சி ஏதும் இருக்கவில்லை. நிகழ்வுகளை கார்த்திக் மாஸ்டர் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார். இவருக்கு ஏற்கனவே காட்டுக்குள் வைத்தே புகைப்படக் கருவியைக் கையாள்வது. அதன் நுணுக்கங்கள் என்பவற்றைக் கிட்டு கற்பித்திருந்தார். தலைவரின் உரை முதலான விடயங்கள் அடங்கிய நிகழ்ச்சி நிரலை சங்கர் மற்றும் தேவர் அண்ணா திட்டமிட்டிருந்தனர்.

1990 ஆம் ஆண்டு நள்ளிரவு 12 மணிக்கு மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. 12 மணி இரு நிமிடத்துக்கு சுடரேற்றுமாறு விடுத்த அழைப்புக்கு மதிப்பளித்திருந்தனர் மக்கள். ஆலயங்களில் மணிகள் ஒலிக்க வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மக்கள் சுடரேற்ற தலைவரின் உரை வானொலியில் ஒலிபரப்பானது. வீட்டு வாசலில் சுடரேற்றிய சமயம் மழை பெய்தது. அதனால் சுடர் அணைந்து விடாமலிருக்க குடை பிடித்தனர். இந்தக் காட்சி ஒரு ஓவியரின் மனதில் தைத்தது. அவர் இக்காட்சியைத் தத்ரூபமாக வரைந்திருந்தார். தீபமேற்றல், மணியோசை ஒலிக்கச் செய்தல் முதலான விடயங்களெல்லாம் கவிஞர் புதுவை அண்ணாவின் ஆலோசனையே. அதனைத் தலைவர் ஏற்றிருந்தார். மாவீரரின் பெயரை வீதிகளுக்கு சூட்டுவதும் நடைபெற்றது. மாவீரர் பெற்றோரைக் கௌரவித்தல் நிகழ்வும் இந்த ஆண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. வலிகாமம் பகுதி மாவீரர்களது பெற்றோர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் வடமராட்சியைச் சேர்ந்தோர் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் தென்மராட்சியைச் சேர்ந்தோர் டிறிபேர்க் கல்லூரியிலும் தீவகத்தைச் சேர்ந்தோர் வேலணையிலும் கௌரவிக்கப்பட்டனர். புதிய உடைகள், அன்பளிப்புகள் வழங்கல், விருந்தோம்பல் முதலான விடயங்கள் பெற்றோரை நெகிழ வைத்தன. தாங்கள் இழந்த பிள்ளைகளை அங்கிருந்த போராளிகளின் வடிவில் கண்டனர். இந்திய இராணுவ காலத்தில் ஒரு போராளி வீரச்சாடைந்தார். அவரது உடல் ஓரிடத்தில் எரியூட்டப்பட்டது. ஏதோ அனாதைகள் போல எங்கள் சகாவை எரிப்பது ஒரு போராளியின் மனதைத் தைத்தது. விடுதலைக்காகப் புறப்பட்டவர்கள் என்றாலும் அவர்களுக்கான நிகழ்வு கௌரவமாக நடத்தப்பட வேண்டும். எங்கள் கட்டுப்பாட்டில் ஒரு நிலம் இருக்குமாயின் தனிப் போராளிகளுக்கென ஒரு சுடலை அமைக்க வேண்டும் என ராஜன் நினைத்தார்.

### துயிமில்லங்களின் உருவாக்கம்

நெருக்கடிகள் தானே புதிய சிந்தனைகளை தோற்றுவிக்கும். எம்.ஜி.ஆர். இளமையில் வறுமை காரணமாக பட்டினி கிடக்க வேண்டியேற்பட்டது. அந்த வலி மனதில் ஆழமாகப் பதிந்திருந்ததால் தான், தாம் முதலமைச்சராக வந்தபோது சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். தான் சாப்பிடக் கூடிய நிலையில் இருந்திருந்தால் நிச்சயம் கல்வியை இடைநிறுத்தியிருக்க மாட்டார். இந்த நிலை தனது ஆட்சியில் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடாது. முதலில் உணவுக்காகவேனும் பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் வரட்டும் என நினைத்தார்.

அதுபோல் வாழைத்தோட்டத்தில் சேரி வாழ்க்கையை அனுபவித்ததால்தான் ஒவ்வொரு குடும்பத்துக்குத் தனித்தனி வீடுகள் அமைக்கப்பட வேண்டுமென்று பிரேமதாஸ நினைத்தபடியால்தான் வீட்டுத் திட்டத்தில் அதீத அக்கறை காட்டினார். 10 லட்சம் வீட்டுத் திட்டத்தை நிறைவேற்றினார். அதைப் போன்றதே போராளிகளுக்கான தனிச் சுடலை என்ற சிந்தனையும். ராஜன் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரானதும் தனது எண்ணத்தைச் செயற்படுத்த முனைந்தார். முதலில் நிலம் வேண்டுமே? சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு சொந்தமான நிலம் கோப்பாய். இராச பாதையில் உள்ளது என்ற தகவலை ஒரு போராளி தெரிவித்தார். அதனையே போராளிகளின் சுடலையாக்குவோம் என முடிவெடுத்தார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ராஜன். காணியைத் துப்புரவாக்குதல் போன்ற பணிகளில் பொ.ஐங்கரநேசனின் 'தேனீக்கள்" அமைப்பைச் சேர்ந்த மாணவர்களும் ஈடுபட்டனர். அடுத்து சுடலையையும் வடிவமைக்க வேண்டும். யாழ்.நகரப் பொறுப்பாளராக இருந்த கமல் மாஸ்டர் (வீரச்சாவடைந்துவிட்டார்) தனது பணிமனைக்கு முன்னால் வெளிநாட்டிலிருந்து வந்த கட்டட வடிவமைப்பாளர் ஒருவர் இருக்கிறார் என்று தெரிவித்தார். அவரையே வரவழைத்து சுடலைக்கான வடிவம் அமைக்கப்பட்டது. வடிவமைப்பாளர் கோரியபடி கந்தர்மடத்திலிருந்த பொறியியலாளர் பங்களிப்பும் கிடைத்தது. ஏற்கனவே அறிமுகம் இல்லாதபோதும் இருவரும் ஆர்வமுடன் இப்பணியில் ஈடுபட்டனர். பொற்பதி வீதியிலுள்ள கட்டடத் தொழிலாளிகளின் பங்களிப்பில் நடந்த பணிகளில் உடலை எரிப்பதற்கான மேடையும் அடங்கியிருந்தது. இதன் பின்னர் வீரச்செய்தியவர் ஒரு கிறிஸ்தவர். அவரை எப்படி எரிப்பது என்ற பிரச்சினை. அதுவும் தனிச் சுடலையில் ஏன் எரிப்பான் என்பது அடுத்த கேள்வி. விவகாரம் எழுந்ததும் ராஜன் அங்கு சென்றார். "பொதுச் சுடலையில் கண்ட காவாலி, கழிசறைகளையும் எரித்திருப்பார்கள். எங்கள் மகனோ புனிதமான மாவீரர். காவாலிகளை எரித்த இடத்தில் இவரையும் எரிப்பதை ஏற்கமாட்டார்கள் தானே?" எனக் கேட்டார். யதார்த்தத்தைப் புரிந்தனர் பெற்றோர். மேடையில் இவரது சடலம் எரிப்பதை ஒளிப்படமாக எடுத்து தலைவருக்குக் காண்பிக்கப்பட்டது. "தனி மயானம் நல்லதுதான் நாங்கள் ஏன் எரிக்க வேண்டும்? புதைக்கலாமே?" இந்தக் கேள்வி தான் வித்துடல்களைப் புதைக்கும் வழக்குக்கு அத்திபாரம். அடுத்ததாக வீரச்சாவெய்துபவரின் வீட்டுக்கு சென்றபோது அங்கும் பிரச்சினை எழுந்தது. ஏன் எங்கள் பிள்ளையைச் சுடலையில் எரிக்காமல் புதைக்க வேண்டும்? என்று கேட்டனர். நீங்கள் மகனின் நினைவு எழும் போதெல்லாம் அந்த இடத்துக்குச் சென்று கும்பிடலாம். அழலாம். பூப்போடலாம் என்று விளக்கமளிக்கப்பட்டது. வரலாற்றில் துயிலுமில்லத்தில் முதன் முதலாக விதைக்கப்பட்டவர் என்ற வரலாறு சோலை என்ற மாவீரருக்குக் கிடைத்தது. மாவீரரை விதைக்குமுன் வாசிக்கப்படும் வாசகங்களையும் (மாவீரர் பெயர் தவிர்த்தது )புதுவை அண்ணாவே எழுதினார்.

### மாவீரர் பதிவுகள்

இந்தக்காலப் பகுதிகளிலே மாவீரர் பணிமனை முழு அளவில் செயற்பட ஆரம்பித்தது. இந்தியப் படையினரின் வருகைக்கு முன்னர் மாவீரர்களின் விபரம் பேணப்பட்டிருந்தது. எனினும் இந்தியப் படையினரின் காலத்தில் புதிதாக இணைந்து கொண்டோர் பற்றிய விவரம் தலைமைக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தக் காலத்திலேயே இணைந்து அக்காலப் பகுதியிலேயே சிலர் மாவீரராகியும் இருந்தனர். எனவே இவ்வாறான விடயங்களைத் தெரிவிக்கும்படி பகிரங்க அறிவிப்பு விடுக்கப்பட்டது. இதற்கு பொன்.பூலோகசிங்கம் என்ற சட்டத்தரணியின் பங்களிப்பு காத்திரமானதாக இருந்தது. அவர் நாள்தோறும் தினக்குறிப்பு (டயரி) எழுதும் பழக்கமுடையவர். பத்திரிகைகளில் வரும் மாவீரர் இழப்பு. பொதுமக்கள் இழப்பு (படையினர் மற்றும் இனவாதிகளால் ஏற்படுத்தப்பட்டவை) குறித்து அவர் எழுதிய குறிப்புகளே மாவீரர் பட்டியலை கணிசமான அளவு சரியாக்க உதவிற்று. தாவடியில் தும்புத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சில் லூக்காஸ் என்பவர் மாவீரரானார். ஆனால் இந்த மாவீரர் பற்றிய விவரம் எவருக்கும் தெரியாது. நாவலப்பிட்டியைச் சேர்ந்தவர் என்று மட்டுமே தெரியும்.

1990 இல் ஈழநாதம் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்ட போது வீரவணக்க விளம்பரங்கள் வெளிவந்தன. தங்கள் பிள்ளைகளை, உறவுகளை, நட்புகளை நினைவுகூர வசதியான சிலரால் மட்டுமே முடிந்தது. அதேசம்பவங்களில் வீரச்சாவெய்திய ஏனைய மாவீரர்களை எவரும் நினைவுகூரவில்லை. இதனைக் கண்ணுற்ற ஒரு போராளி அப்போதைய அரசியல் தலைமையை வகித்த மாத்தயாவிடம் இவ்விடயம் பற்றிக் குறிப்பிட்டார். நாளாந்தம் அதே நாளில் வீரச்சாவெய்தியோர் விவரம் வெளியிடப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தைத் தெரிவித்தார். வருடம் 365 நாளில் மட்டுமல்ல 4 வருடங்களுக்கு ஒருமுறைவரும் (லீப்வருடம் ) பெப்ரவரி 29 இல் கூட மாவீரர் விவரம் உண்டு என்பதும் தெரியவந்தது. இதற்கென இயங்கிவந்த பணிமனை இரண்டு மாவீரர்களின் தந்தையான பொன்.தியாகம் அப்பாவின் பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டு மாவீரர் பணிமனையுடன் இணைக்கப்பட்டது. (பின்னர் இவர் மூன்று மாவீரர்களின் தந்தையானார். பள்ளமடுவில் இவரது மகளும் வீரச்சாவடைந்தார்) பெயரில், திகதியில், முகவரியில் என பல்வேறு தவறுகளுடன் இருந்த பட்டியல்கள் தியாகம் அப்பாவின் முயற்சியால் திருத்தப்பட்டன. மாவீரர் நிகழ்வுகள் பற்றிய சுற்றுநிருபங்கள் இந்தப் பணிமனையினால் விடுக்கப்பட்டன. இந்தப் பணிமனை கோரும் விவரங்களை உடனடியாக வழங்க வேண்டும் என பிராந்தியத் தளபதிகளுக்கும் தலைவரும் உத்தரவு பிறப்பித்திருந்தார். எந்தெந்தத் துயிலுமில்லங்களில் யார் .யார் விதைக்கப்பட்டார்கள், வித்துடல் கிடைக்காத யார் யாருக்கு எங்கெங்கு நினைவுக்கல் உள்ளன போன்ற முழு விவரங்களும் இந்தப்பணிமனையில் இருந்தது.இதன் மூலம் மிகவும் காத்திரமான பணியை செய்துவந்தார் பொன் தியாகம் அப்பா.

### "தாயகக் கனவுடன்.."

1992 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தலைவர் தலைமையில் நடந்தது. அப்போது மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளராக விளங்கிய ஜெயா ஒரு ஆலோசனையை முன்வைத்தார். மாவீரர் பெற்றோரும் போராளிகளும் இணைந்து பாடக் கூடிய ஒரு பாடல் உருவாக்கப்பட வேண்டும் என்றார். உடனே தலைவர் புதுவையண்ணாவைப் பார்க்க கையைப் பொத்தி பெருவிரலை உயர்த்திக் காட்டினார் புதுவையண்ணா. ஈழநாதம், விடுதலைப் புலிகள், சுதந்திரப் பறவை வெளிவந்த மாவீரர்கள் பற்றிய கட்டுரைகளை தனியான நூல்களாக வெளியிட வேண்டும் என்ற அறிவனின் யோசனையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. துயிலு மில்லத்துக்கு வருவோர் தமது பிள்ளைகளின் நினைவாக வீடுகளில் நாட்டுவதற்கு அவர்களின் கல்லறைகள் மற்றும் நினைவுக் கற்களுக்கு முன்னால் தென்னை போன்ற பயன்தரு மரங்களை வைக்க வேண்டும் என்று பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வைக்கப்பட்ட யோசனையும் ஏற்கப்பட்டது. இந்த யோசனை இன்று பல்வேறு வகையிலும் பின்பற்றப்படுவது ஆரோக்கியமான விடயம்.

ஜெயாவின் கருத்தை உடனடியாக செயலாக்கினார் புதுவையண்ணா. அதுதான் "தாயகக் கனவுடன்" என்று ஆரம்பிக்கும் மாவீரர் பாடல். மனதைப் பிழியும் இப்பாடல் இன்று வரை மாவீரர் குடும்பத்தினர், முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது. கண்ணன் இசையமைக்க வர்ணராமேஸ்வரன் குரலில் ஒலித்த பாடல் இது. கோப்பாய் துயிலுமில்லத்தில் தனக்குப் பக்கத்தில் நின்று நேரில் அதனைப் பாடவேண்டும் என்று அப்போதைய அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் வர்ணராமேஸ்வரனின் வேண்டிக் கொண்டார். ஒலிபெருக்கியிலும் இந்தப்பாடல் இசையுடன் ஒலித்தது. முதன் முதலாக இவ்வரிகளைக் கேட்ட மாவீரர் குடும்பத்தினர் கதறி அழுதனர். இப்பாடலின் ஒலிநாடாவை ஒரு போராளியிடம் (கரும் பறவை) வழங்கிய புதுவையண்ணை முதன் வரிகளைக் கேட்கும் போது உங்களுக்கு நினைவில் வரும் சம்பவங்களையும் கருத்துக்களையும் எழுதித் தாருங்கள் என்றார். அந்த விடயம் வெளிச்சம் இதழில் வெளிவந்தது. ஒரு மாவீரனின் தாயாரான மலரன்னையும் அன்றைய மாவீரர் நாள் குறித்து கட்டுரை எழுதியிருந்தார்.

### மாறிய நேரம்

1992 மாவீரர் நாள் பொதுச்சுடரை தமிழ்ச் செல்வன் ஏற்றினார்.1991 இல் இதனை மாத்தயா ஏற்றியிருந்தார். மாவீரர் பாடலில் வரும் "நள்ளிரா வேளையில் நெய் விளக்கேற்றியே நாமுமை வணங்குகிறோம்" என்ற வரி "வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்" எனப் பின்னாளில் மாற்றப்பட்டது. ஏனெனில் முன்னர் நள்ளிரவிலேயே மாவீரர் நாள் நினைவுகூரப்பட்டது. பின்னரே தற்போதுள்ள மாலை 6.05 க்கு மாவீரர் சுடர் ஏற்றும் முறை வழக்கத்துக்கு வந்தது . தற்போதைய நேரமே முதல் மாவீரரான சங்கர் வீரச்சாவெய்திய கணம். 2009 மே 15 ஆம் நாள் வரை 35 ஆயிரம் அளவில் மாவீரர்களின் விவரம் கிடைத்தன. இதன் பின்னர் தரவுகளைப் பேணவோ வழங்கவோ இயலக் கூடிய நிலையில் சூழல் அமையவில்லை.

# விளையாட்டு செய்திகள்

## இந்திய ரி 20 அணி – அரையிறுதி தோல்விக்கு பின்னர் பல மாற்றங்கள் இடம்பெறலாம்

இந்திய ரி20 அணி அடுத்த இரண்டு வருடங்களில் பாரிய மாற்றங்களை சந்திக்கும் ரோகித் சர்மா விராட்கோலி ரவிச்சந்திரன் அஸ்வின் போன்றவர்கள் ஓய்வு பெறுவார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரோகித் சர்மா விராட்கோலி அஸ்வின் போன்றவர்கள் மெல்ல மெல்ல அணியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

தினேஸ் கார்த்திக்கும் ரவிச்சந்திரன் அஸ்வினும் ரி20 போட்டிகளில் தங்களின் இறுதி போட்டிகளை விளையாடியுள்ளனர் பி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் விராட்கோலி ரோகித்சர்மாவை பொறுத்தவரை தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களிடமே வழங்கப்படும் என  இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்த ரி20 உலக கிண்ணப்போட்டிகளிற்கு இன்னமும் இரண்டு வருடங்கள் உள்ள சூழ்நிலையில் புதிய ரி20 அணியொன்று காணப்படும் ஹர்டிக் பண்ட்யா அணித்தலைவராக நியமிக்கப்படுவார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை எவரையும ஓய்வு பெறுமாறு ஒருபோதும் கேட்காது அது தனிப்பட்ட தீர்மானம் 2023 இல் மிகவும் குறைந்தளவு ஒருநாள் போட்டிகளே விளையாடப்படவுள்ள நிலையில் சிரேஸ்ட வீரர்கள் ஒருநாள் டெஸ்ட்போட்டிகளில் கவனம் செலுத்துவார்கள் என  இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உங்களிற்கு விருப்பம் இல்லாவிட்டால் நீங்கள் ஓய்வு பெறத்தேவையில்லை.அடுத்த வருடம் அனேகமான சிரேஸ்ட வீரர்கள் ரி20 போட்டிகளில் விளையாடுவதை பார்க்கமாட்டீர்கள் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.




## பலரையும் வியக்க வைத்த விவாகரத்து!



இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா- பாகிஸ்தான் முன்னாள் கேப்டன் சோயப் மாலிக் தம்பதிகள் விவாகரத்து செய்துள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆறு முறை கிராண்ட் ஸ்லாம் இரட்டையர் பட்டத்தை வென்றவர், இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா. 2010 இல் 5 மாதங்கள் காதலித்து பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சோயப் மாலிக்கை திருமணம் செய்து கொண்டார்.

இந்த ஜோடி தற்போது முறைப்படி விவாகரத்து செய்துவிட்டதாக கிரிக்கெட் வீரருக்கு நெருக்கமான வட்டாரம் தெரிவித்துள்ளது. சானியா மிர்சா கடந்த சில நாட்களாக இந்தியாவில் வசித்து வருகிறார். அவர்களுக்கு இஷான் என்ற மகன் உள்ளார். இந்நிலையில் அவர்கள் இப்போது அதிகாரப்பூர்வமாக விவாகரத்து பெற்றுள்ளனர். அதற்கு மேல் என்னால் சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் பிரிந்துவிட்டார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும்" என்று பாகிஸ்தானில் உள்ள மாலிக்கின் நிர்வாகக் குழுவில் இருந்த ஒருவர் உறுதிப்படுத்தினார். சோயப் தனக்கு துரோகம் செய்து ஏமாற்றியதை சானியா கண்டுபிடித்ததை தொடர்ந்து இது நடந்து உள்ளது.. அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் மகன் இஷானுக்கு பெற்றோராக இருப்பார்கள் என கூறப்படுகின்றது.

இந்நிலையில் சமீபத்தில், சானியா தனது விவாகரத்து வதந்திகளுக்கு மத்தியில் ஒரு ரகசிய இடுகையைப் பகிர்ந்துள்ளார். இன்ஸ்டாகிராமில், "உடைந்த இதயங்கள் எங்கே செல்கின்றன? அல்லாவைக் காண!" என குறிப்பிட்டு இருந்தார்.

இதை பார்த்த அவரது ரசிகர்கள் கவலைப்படத் சமீபத்தில் இருவரும் தங்கள் மகனின் பிறந்த நாளை ஒன்றாக கொண்டாடினர் சோயிப் இன்ஸ்டாகிராமில் கொண்டாட்டத்தின் புகைப்படங்களை பகிர்ந்து கொண்டாலும், சானியா அதனை வெளியிடவில்லை. சோயிப் தனது இன்ஸ்டாவில் "நீங்கள் பிறந்தவுடன், நாங்கள் மிகவும் அடக்கமாகிவிட்டோம், வாழ்க்கை எங்களுக்கு சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. நாம் ஒவ்வொரு நாளும் ஒன்றாக இருப்பதில்லை, சந்திப்பதில்லை, ஆனால் பாபா உங்களைப் பற்றியும் உங்கள் புன்னகையைப் பற்றியும் ஒவ்வொரு நொடியும் நினைத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் கேட்கும் அனைத்தையும் அல்லா உங்களுக்கு வழங்குவானாக. பாபாவும் அல்லாவும் உன்னை நேசிக்கிறார்கள் என சோயிப் குறிப்பிட்டு இருந்தார்.

## கால்பந்து உலகக்கிண்ணத் தொடர்: 25பேர் கொண்ட பிரான்ஸ் அணி அறிவிப்பு!

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெறவுள்ள கால்பந்து உலகக்கிண்ணத் தொடருக்கான, பிரான்ஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கும் பிரான்ஸ் அணியின் 25 பேர் கொண்ட விபரத்தை பயிற்சியாளர் டிடைர் டெஸ்சாம்ப்ஸ் அன்று(வியாழக்கிழமை) அறிவித்தார்.

**கோல்காப்பாளர்கள்: ஹூகோ லோரிஸ், ஸ்டீவ் மன்டான்டா, அல்போன்ஸ் அரோலா**

**பின்களம்: லூகாஸ் ஹெர்னாண்டஸ், தியோ ஹெர்னாண்டஸ், பிரெஸ்னல் கிம்பெம்பே, இப்ராகிமா கோனேட், ஜூலஸ் கோண்டே, பெஞ்சமின் பவார்ட், வில்லியம் சலிபா, ரபெல் வரேன், டயோட் உபாமிகனோ**

**நடுகளம்: எடார்டோ கமாவிங்கா, யூசோப் போபனா, மேத்யூ கான்டோசி, அட்ரியன் ரபியாட், அரேலியன் சோவாமெனி, ஜோர்டன் வெரேட்டவுட்**

**முன்களம்: கரீம் பென்ஷிமா, கிங்ஸ்லி கோமன், ஒஸ்மானே டெம்பல், ஆலிவர் ஜிரார்ட், கிரிஸ்மேன், கைலியன் எம்பாப்பே, கிறிஸ்டோபர் குன்கு.**




நடப்பு சம்பியன் பிரான்ஸ் அணி 'டி' பிரிவில் இடம் பிடித்துள்ளது. 16ஆவது முறையாக உலகக் கிண்ணத் தொடரில் அடியெடுத்து வைக்கும் பிரான்ஸ் அணி 1998ஆம் மற்றும் 2018ஆம் ஆகிய ஆண்டுகளில் உலகக்கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

இந்த முறை பிரான்ஸ் அணி உலகக் கிண்ணத் தொடரை வென்றால் தொடர்ந்து 2ஆவது முறையாக உலகக் கிண்ணத்தை வென்ற 3ஆ வது நாடு என்ற பெருமையை தன்வசப்படுத்தும். ஏற்கனவே இத்தாலி (1934, 1938), பிரேஸில் (1958, 1962) ஆகிய அணிகள் தொடர்ச்சியாக 2 தடவை உலகக் கிண்ணத்தை வென்றுள்ளன. 22ஆவது கால்பந்து உலகக்கிண்ணத் தொடர், எதிர்வரும் 20ஆம் திகதி முதல் டிசம்பர் 18ஆம் திகதி வரை கட்டாரில் நடைபெறவுள்ளது. கட்டாரில் உள்ள டோஹா, அல் கோர், லுசைல், அல் ரையான், அல் வக்ரா ஆகிய 5 நகரங்களில் உள்ள 8 மைதானங்களில் போட்டி நடைபெறுகிறது. அரபு நாட்டில் முதல்முறையாக நடைபெறும் இந்த தொடரில் பங்கேற்கும் 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு முந்தைய வெளியேற்று சுற்றுப் போட்டி (ரவுண்ட் 16) சுற்றுக்கு தகுதி பெறும்.



# உலக பார்வை



## மெக்ஸிகோவில் மதுபானசாலையில் துப்பாக்கிச்சூடு

மெக்ஸிகோவில் குவானாஜீவாடோ மாநிலத்தில் உள்ள மதுபான சாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 2 பேர் காயமடைந்துள்தாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அபாசியோ எல் ஆல்டோ நகரில் செயல்பட்டு வரும் ஒரு மதுபானசாலை கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் ஆயுதம் ஏந்திய கும்பல் ஒன்று திடீரென புகுந்து, உள்ளே இருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் மதுபான விடுதியில் இருந்த ஐந்து ஆண்களும் நான்கு பெண்களும் கொல்லப்பட்டனர். 2 பெண்கள் காயமடைந்தனர். காயமடைந்த பெண்களின் உடல் நிலை தற்போது சீராக உள்ளது. ஆனால் தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. துப்பாக்கிச் சூடு நடந்த பகுதிக்கு மாநில மற்றும் மத்திய பாதுகாப்பு படை பிரிவுகள் அனுப்பப்படும் என்று அதிகாரிகள் கூறினர்.

மெக்ஸிகோவின் தொழில்துறை மையமான குவானாஜீவாடோ பகுதியில், சமீபத்திய ஆண்டுகளில் கும்பல் வன்முறை அதிகரித்துள்ளது. கடந்த மாதம் இரபுவாடோ நகரில் உள்ள மதுபான விடுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. மெக்ஸிகோ ஜனாதிபதியாக 2018 இல் பதவியேற்ற ஆண்ட்ரெஸ் மானுவல் லோபஸ் ஒப்ரடோர், மெக்ஸிகோவில் தலைவிரித்தாடும் கும்பல் வன்முறையைக் குறைப்பதாக உறுதியளித்திருந்தார். எனினும் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.



## பிரான்ஸ் மருத்துவ துறையில் ஏற்பட்ட புரட்சி!

பிரான்ஸ் மருத்துவதுறையில் புரட்சியை ஏற்படுத்தும் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. முதல் முறையாக மூக்கை இழந்த பெண்ணுக்கு 9 வருடங்களின் பின்னர் மறுவாழ்வு கிடைத்துள்ளது. உடல்பாகத்தில் இருந்து செயற்கையாக மூக்கு ஒன்றை உருவாக்கி, அதை பெண் ஒருவருக்கு பொருத்தி பிரான்ஸ் மருத்துவத்துறையினர் சாதனை படைத்துள்ளனர்.

Toulouse நகர பல்கலைக்கழக மருத்துவமனையில் இச்சிகிச்சை இடம்பெற்றிருந்தது. கடந்த 2013 ஆம் ஆண்டில் பெண் ஒருவருக்கு புற்று நோய் காரணமாக அவரது மூக்கு அகற்றப்பட்டது. அதன் பின்னர் மூக்கு இல்லாமல் வாழ்ந்த குறித்த பெண்ணுக்கு இவ்வாரத்தில் மீண்டும் மூக்கு கிடைத்துள்ளது. குறித்த பெண்ணின் உடல் தசைகளையும், சில செயற்கை உயிரியல் பொருட்களையும் கொண்டு அவரது மூக்கு உருவாக்கப்பட்டது.

பெண்ணின் கைகளில் 3D Print மூலம் இந்த மூக்கு உருவாக்கப்பட்டு இரத்த ஓட்டம் கொண்ட உறுப்பாக வளர்க்கப்பட்டது. பின்னர் குறித்த மூக்கு கைகளில் இருந்து அகற்றப்பட்டு, அவரது மூக்கில் பொருத்தப்பட்டது. இதுபோன்ற சம்பவம் இடம்பெறுவது உலகில் முதன் முறையாகும். Toulouse புற்றுநோயிற்கான பல்கலைக்கழக மருத்துவமனை இந்த சாதனையை படைத்துள்ளது. நோயாளி நலமுடம் இருப்பதாகவும், அவரது உடலில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## பூங்காவிற்குள் பெண்கள் நுழைய அனுமதி இல்லை

தலைநகர் காபூலில் உள்ள பொழுதுபோக்கு பூங்காக்களில் ஆப்கானிஸ்தான் பெண்கள் நுழைய தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.



கடந்த ஆண்டு, தலிபான் போராளிகள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றினர், அன்று முதல், பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஜனாதிபதிகள் பைடன்- ஜின்பிங் அடுத்த வாரம் முதல் தடவையாக சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கும் அடுத்த வாரம் சந்திக்கவுள்ளனர் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. இந்தோனேஷியாவின் பாலியில் நடைபெறவுள்ள ஜி20 உச்சிமாநாட்டின் போது இவர்கள் சந்திக்கவுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பின்னர் சீன ஜனாதிபதியை ஷீ ஜின்பிங்கை அவர் சந்திக்கவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.



ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்பதற்கு முன்னர் இவர்கள் சந்தித்துள்ளனர். தொடர்பாடல் வழிமுறைகளை பேணுதல் மற்றும் ஆழமாக்குதல் குறித்தும், போட்டித்தன்மையை பொறுப்புணர்வுடன் நிர்வகித்தல் மற்றும் இணைந்து செயற்படுவது குறத்து இவர்கள் கலந்துரையாடுவர் என வெள்ளை மாளிகை பேச்சாளர் கெரீன் ஜீன் பிரைஸ் தெரிவித்துள்ளார்.

## அவுஸ்திரேலிய சுகாதார நிறுவனத்திலிருந்து 97 லட்சம்பேரின் தரவுகள் திருட்டு!

அவுஸ்திரேலியாவின் பிரதான சுகாதார காப்புறுதி நிறுவனமொன்றின் கணினி வலையமைப்புக்குள் ஊடுருவி, 97 லட்சம் பேரின் தரவுகளை ஊடுருவல் காரர்கள் திருடியுள்ளனர் என அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவுஸ்திரேலிய பிரதமர் அன்தனி அல்பானீஸ் தொடர்பான தரவுகளும் இவற்றில் அடங்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவுஸ்திரேலியாவின் மிகப் பெரிய சுகாதார காப்புறுதி நிறுவனமான மெடிபேங்க் (Medibank) நிறுவனத்திடம் ரஷ்ய ஊடுருவல்காரர்கள் (ஹேக்கர்கள்) 15 லட்சம் அவுஸ்திரேலிய டொலர் கப்பம் கோரியிருந்தனர்.

இந்த கப்பத் தொகையை செலுத்துவதற்கு மெடிபேங்க் நிறுவனம் மறுத்ததையடுத்து, திருடப்பட்ட தரவுகளை ரஷ்ய ஊடுருவல்காரர்கள் இணையத்தில் வெளியிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஊடுருவல்காரர்கள், ரஷ்யாவைத் தளமாகக் கொண்டவர்கள் என பொலிஸார் நம்புவதாக அவுஸ்திரேலிய பொலிஸ் ஆணையாளர் றீஸ் சேர்ஷோ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இன்டர்போலுடன் தாம் இணைந்துசெயற்படவுள்ளதாகவும் ரஷ்ய பொலிஸாரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் அவுஸ்திரேலிய பொலிஸ் ஆணையாளர் றீவ்ஸ் கேர்ஷோ தெரிவித்துள்ளார்.

## ராஜீவ் கொலை வழக்கில் 6 பேரும் விடுதலை – வரலாற்று தீர்ப்பை அறிவித்தது இந்திய உச்சநீதிமன்றம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி உள்பட 6 பேரையும் விடுதலை செய்து இந்திய உச்சநீதிமன்றம் பரபரப்பு உத்தரவு வழங்கியுள்ளது. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 26 பேருக்கு சென்னை பூவிருந்தவல்லி தடா நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது. பின்னர் மேல்முறையீடு வழக்கில் சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளனுக்கு மட்டும் தூக்கு தண்டனை உறுதியானது. கடந்த 2000 ஆம் ஆண்டு நளினியின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. சுப்ரீம் கோர்ட்டால் 2014 ஆம் ஆண்டு பேரறிவாளன், சாந்தன், முருகனின் தூக்கு தண்டனை ரத்து செய்யப்பட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. பின்னர் தம்மை வழக்கில் இருந்து விடுதலை செய்யக் கோரி பேரறிவாளன் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு தொடர்ந்தார்.




அதேநேரத்தில் பேரறிவாளன் உள்ளிட்ட ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் 7 பேரையும் விடுதலை செய்யலாம் என தமிழக அரசு முடிவெடுத்தது. தமிழக அமைச்சரவையின் இந்த தீர்மானத்தை மத்திய அரசு கடுமையாக எதிர்த்தது. பேறறிவாளவன் தம்மை விடுதலை செய்யக் கோரிய வழக்கில் தமிழக அமைச்சரவை தீர்மானம் முக்கியமானதாக இருந்தது. குறிப்பாக 7 தமிழரை விடுதலை செய்யும் அமைச்சரவை முடிவு மீது கவர்னர் எந்த பரிந்துரையும் செய்யாமல் இருந்ததால் சுப்ரீம் கோர்ட்டு கடும் கண்டனம் தெரிவித்தது.

பின்னர் பேரறிவாளனின் 30 ஆண்டுகளுக்கு மேலான சிறைவாசம், நன்னடத்தை, பரோல் கால செயல்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து சுப்ரீம் கோர்ட்டு தமக்கான சிறப்பு அதிகாரம் வழங்கும் அரசியல் சாசனத்தின் 142- வது பிரிவின் கீழ் பேரறிவாளனை விடுதலை செய்தது. இதனடிப்படையில் தங்களையும் விடுதலை செய்ய வேண்டும் என நளினி உள்ளிட்ட எஞ்சிய 6 பேரும் சுப்ரீம் கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்தனர். இம்மனு மீது சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், நளினி உள்பட 6 பேரும் தாக்கல் செய்த மனு சுப்ரீம் கோர்ட்டில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, முருகன், சாந்தன், ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து சுப்ரீம் கோர்ட்டு அதிரடி உத்தரவிட்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய 6 பேரையும் விடுதலை செய்ய சுப்ரீம் கோர்ட்டு அதிரடி உத்தரவிட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்கு மேலான சிறைவாசம், நன்னடத்தை, பரோல் கால செயல்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து சுப்ரீம் கோர்ட்டு தமக்கான சிறப்பு அதிகாரம் வழங்கும் அரசியல் சாசனத்தின் 142- வது பிரிவின் கீழ் பேரறிவாளனை விடுதலை செய்தது. அதே அதிகாரத்தை கொண்டு நளினி உள்பட 6 பேரையும் விடுதலை செய்து இந்திய உச்சநீதிமன்றம்அதிரடி உத்தரவிட்டுள்ளது.

# "நாளைய உலகம் எங்கள் பொறுப்பு மிடுக்காய் திரண்டு போதையை ஒழிப்போம்"

மாணவர் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாகிய அளவில் எழுந்திருக்கும் பிரச்சனைதான் இந்த போதைப்பொருட்கள் போதைப் பொருட்களினால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன எனவே மாணவ சமுதாயத்தில் விழிப்புணர்வினை கொண்டு வரும் நோக்கில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தின் வேண்டுகோளுக்கு இணங்க மற்றும் வவுனியா OMEGA ஆடைத்தொழிற்சாலையின் நிதி அனுசரனையில் வவுனியா கலைநிலா கலையகம் **"நாளைய உலகம் எங்கள் பொறுப்பு மிடுக்காய் திரண்டு போதையை ஒழிப்போம்"** எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலீஸ் உத்தியோகத்தர்கள் அனைவருடனும் இணைந்து 08/11/2022 அன்று வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தில் ஆற்றுகையினை செய்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டியது.
























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 13.11.2022 அன்று வெளியிடப்பட்டது.